ஓம்

# சித்தாந்தம்

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறென் றறியேன் பராபரமே"

மலர். ௧ | விபவ ஆண்டு கார்த்திகைத் திங்கள் 1928 ௵ டிசம்பர் ௴ | இதழ். ௧௨

உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| தாயுமானவர் ... ... | | 265 |
| முப்பொருள் ... ... | பத்திராசிரியர் மணி. திருநாவுக்கரசு முதலியார் | 266 |
| சமரசம் ... ... | ... J. M. N. | 269 |
| "நாட்டின் முன்னேற்றமும் நமது சமயமும்" | வித்துவான் - A. வரதநஞ்சைய பிள்ளை அவர்கள் | 278 |
| சிவமும் சத்தியும் ... | ... D. கோபால செட்டியார். முன் "நியு ரிபார்மர்" பத்திராதிபர் | 279 |
| மாமிச உணவை ஏன் நீக்கவேண்டும் | ... சென்னைப் புலால் மறுத்தல் சங்கம் | 283 |
| சமய உணர்வும் ஆராய்ச்சி யறிவும் | ... காழி. சிவ. கண்ணுசாமி, B. A. | 285 |
| "பண்மயத்த மொழிப்பாவை" | ... வல்லை - பாலசுப்பிரமணியன் | 287 |
| புத்தக மதிப்புரை ... | ... பத்திராசிரியர் | 294 |
| சித்தாந்தத்தைப் பற்றிய மதிப்புரை | ... பத்திரிகைகள் | 296 |
| சமாஜ வரவு செலவு கணக்கு | ... அக்டோபர் | 298 |
| " | ... நவம்பர் | 299 |


பத்திராசிரியர்
மணி. திருநாவுக்கரசு முதலியார்,
ஆசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

உதவிப் பத்திராசிரியர்
வித்துவான்
காரிப்பாக்கம் - கண்ணப்ப முதலியார்.

சைவ சித்தாந்த மகாசமாஜ காரியாலயம்,
92, அரதா முத்தையப்பன் தெரு,
சென்னை.

1928

OFFICE OF THE REGISTRAR ... MADRAS
No.
8 - JAN 1929

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சென்னை, சைவசித்தாந்த மகா சமாஜத்தின்

மாதத் தமிழ்ப் பத்திரிகை

மலர் ஒன்று

**1928**

பத்திராசிரியர்:

மணி. திருநாவுக்கரசு முதலியார்,

ஆசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

உதவிப் பத்திராசிரியர்:

வித்துவான்

பாரிப்பாக்கம் - கண்ணப்ப முதலியார்

“சித்தாந்தம்” தொழில் நிலையம்,

88, திருப்பள்ளித் தெரு, ஜார்ஜ் டவுன், சென்னை.

# சித்தாந்தம்

ஓர் உயர்ந்த மாதத் தமிழ்ப் பத்திரிகை

சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் சார்பிலே திங்கடோறும் வெளிவரும் உயர்ந்த தத்துவப் பத்திரிகை. சைவ சித்தாந்தத்தின் உண்மை நிலையை உணர்த்து முகத்தான் பல சமயக் கொள்கைகளையும் எடுத்துரைப்பது. செந்தமிழ் நடையிலே தெளிவாக எழுதப்படும் பல இனிய அரிய கட்டுரைகளை உடையது. ஆங்கில மொழிபெயர்ப்பான அழகிய கட்டுரைகளையும் ஆங்காங்குக் கொண்டு மிளிர்வது. தமிழறிவைப் பெறுவதற்கும் சைவ உண்மைகளை உணர்வதற்கும் ஒரு பெருந் துணையாயது.

## சந்தா விவரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆண்டு 1-க்கு தபாற்கூலி யுட்பட | உள் நாடு (இந்தியா, பர்மா, சிலோன்).... | ரூ. | 1 | 8 | 0 |
| | வெளி நாடு .... .... | ,, | 2 | 0 | 0 |

குறிப்பு :—ஓராண்டிற்குக் குறைந்த சந்தா கிடையாது.

(1) பத்திரிகை ஆங்கில மாதம் 10-ந்தேதி வெளிவரும்.

(2) சந்தாத் தொகையை முன்னரே செலுத்தியாவது அல்லது வி. பி. யில் செலுத்தியாவது பத்திரிகை பெற்றுக்கொள்ள வேண்டும். வி. பி. யில் பத்திரிகை பெறுபவர்கள் அணா இரண்டு ரிஜிஸ்டிரேஷனுக்காகத் தனியே செலுத்தவேண்டி யிருப்பதால் மணியார்டர் மூலம் பணம் அனுப்பிப் பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளுதல் நலம்.

(3) கடிதம் எழுதும் பொழுதெல்லாம் ஒவ்வொருவரும் தங்கள் சந்தா எண்ணைக் குறிப்பிட்டு எழுதுதல் வேண்டும்.

(4) ஆண்டினிடையில் சேருகிறவர்கட்கு முன் பத்திரிகைகள் கூடிய வரை அனுப்பப்படும்.

(5) பத்திரிகை சேராதவர்கள் அவ்வம்மாதம் 20-ந் தேதிக்குள் எழுதித் தெரிந்துகொள்ள வேண்டும். அப்படித் தவறினவர்கள் பத்திரிகையின் கிரயம் அணா 2½ அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

(6) இடம் மாறுபவர்கள் அடுத்த பத்திரிகை தங்களுக்கு வந்து சேரும் வண்ணம், தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொண்டு, புது விலாசத்தை நமக்கு உடனே அறிவித்தல் வேண்டும்.

(7) வியாச மெழுதுபவர்கள் கடிதத்தின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதி அனுப்ப வேண்டும். ராஜ நிந்தனை, மத தூஷணை, மனித தூஷணை முதலியவைகளும் சைவ சித்தாந்தத்திற்குப் பொருத்தமில்லாத விஷயங்களும் பிரசுரிக்கப்பட மாட்டா. வியாசங்களைத் திருத்தவும், நிறுத்தவும் ஆசிரியருக்குப் பூரண உரிமை யுண்டு.

(8) வியாசதாரர்களின் அபிப்பிராயங்கட்கு ஆசிரியர் உத்தரவாதியல்லர்.

(9) சந்தாதாரர்களும், கட்டுரையாளர்களும் பதில் விரும்பின் ரிப்ளை கார்டாவது, தபால் பில்லையாவது அனுப்பி வைத்தல் வேண்டும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (10) விளம்பர விகிதம் | முழுப் பக்கம் | ரூ. | 10 | 0 | 0 |
| | அரைப் பக்கம் | ,, | 5 | 0 | 0 |
| | கால் பக்கம் | ,, | 3 | 0 | 0 |

(11) இதர விவரங்கட்குக் கீழ்வரும் விலாசத்திற்கு எழுதவும்.

சித்தாந்தம் ஆபீஸ்,
88, திருப்பள்ளி தெரு, ஜார்ஜ்டவுன், சென்னை.

சாது அச்சுக்கூடம்,

இராயப்பேட்டை, சென்னை.

# சித்தாந்தம் மலர் ஒன்றின் உள்ளுறை


| | | | பக்கம் |
|---|---|---|---|
| அத்து விதம் | ... | மணவழகு | 242 |
| ஆன்மவாழ்க்கையும் புலால் மறுத்தலும் | ... | C. S. சாமிநாத முதலியார் | 19 |
| இராமலிங்க சுவாமி கல்வி கற்ற வரலாறு | ... | பத்திராசிரியர் | 203 |
| இராமலிங்க சுவாமிகள் திருக்கோயில் வழிபாடு.. | | பத்திராசிரியர் | 124 |
| இறப்பச்சம் | ... | பத்திராசிரியர் | 145 |
| உண்மைத் தெய்வ உணர்ச்சி | ... | சேலை. சகதேவ முதலியார் | 224 |
| உயிரின் தன்மை | ... | J. M. நல்லசாமி பிள்ளை | 244 |
| உலகம் தேடுவது யாது | ... | பத்திராசிரியர் | 218 |
| எமது பத்திரிகை | ... | பத்திராசிரியர் | 1 |
| ஏரி நிறைந்தனைய செல்வன் | ... | வல்லை. பாலசுப்பிரமணியன் | 42,53 |
| ஐந்து எழுத்து உண்மை | ... | கி. குப்புச்சாமி முதலியார் | 253 |
| ஒட்டிட்ட பண்பு | ... | கி. குப்புச்சாமி முதலியார் | 12 |
| கடவுள் | ... | R. M. அண்ணாமலை செட்டியார் | 228 |
| கடவுள் படைப்பு | ... | பத்திராசிரியர் | 217 |
| கறைக் கண்டனுக்கு மூத்தவள் | ... | கி. குப்புச்சாமி முதலியார் | 63 |
| கால இயல் | ... | உதவிப் பத்திராசிரியர் | 102, 173 |
| குயில் | ... | பத்திராசிரியர் | 241 |
| குருவுக்கும் மாணவனுக்கும் சம்பாஷணை | ... | R. M. அண்ணாமலை செட்டியார் | 249 |
| சமநிலை | ... | வல்லை. பாலசுப்பிரமணியன் | 88, 109, 128 |
| சமய ஆராய்ச்சி | ... | பத்திராசிரியர் | 97 |
| சமய உணர்ச்சி வரலாறு | ... | ம. பாலசுப்பிரமணிய முதலியார் | 59 |
| சமய உணர்வும் ஆராய்ச்சி யறிவும் | ... | காழி. சிவ. கண்ணுசாமி | 135, 187, 257 |
| சமய வாழ்க்கை | ... | பத்திராசிரியர் | 121 |
| சர்வமத சம்மதம் | ... | A. வரதநஞ்சயபிள்ளை | 82 |
| சற்காரிய வாதம் | ... | (வேள்) M. துரைக்கண்ணன் | 230 |
| சமரசம் | ... | J. M. N. | 269 |
| சமய உணவும் ஆராய்ச்சி யறிவும் | ... | காழி. சிவ. கண்ணுசாமி B. A. | 285 |
| சித்தாந்தம் | ... | மணவழகு | 3 |
| சித்தாந்தம் வாழ்த்து | ... | ப. அ. முத்துத் தாண்டவராய பிள்ளை | 72 |
| சித்தாந்தத்தைப் பற்றிய மதிப்புரை | ... | பத்திரிகைகள் | 296 |
| சிவமணிகள் | ... | சுவாமி. இராமசுவாமி | 213, 237 |
| சிவமும் சத்தியும் | ... | D. கோபால செட்டியார் | 247 |
| செய்தித் திரட்டு | ... | | 191, 214, 238, 263 |
| சேக்கிழார் செய்யுளின் தெய்வ நலம் | ... | உதவிப் பத்திராசிரியர் | 209, 222 |
| சைவ சமயம் | ... | மறைமலை யடிகள் | 169 |
| சைவ சாரம் | ... | மறைமலை யடிகள் | 7 |
| சைவ சித்தாந்தம் | ... | பத்திராசிரியர் | 193 |

| | | | பக்கம் |
|---|---|---|---|
| சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் இருபத்திரண்டாவது கூட்டம் | ... | பத்திராசிரியர் | 45 |
| சைவ சித்தாந்தமும் மேல் நாட்டு அறிவியல் நூல்களும் | ... | M. பாலசுப்ரஹ்மண்ய முதலியார் | 14 |
| சைவபரிபாலனம் | ... | பத்திராசிரியர் | 49 |
| சைவமே சமரச சமயம் | ... | பத்திராசிரியர் | 25 |
| திருநாளைப்போவார் தீக்குளித்ததேன் | ... | M. சிவ. முத்துக்குமாரசுவாமி முதலியார் | 149 |
| திருப்பணி வேலையில் விளையுஞ் சில தீங்குகள் | ... | ச. சச்சிதாநந்தம் பிள்ளை | 23, 32 |
| தேவார ஆராய்ச்சி | ... | சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளை | 131, 159 |
| நம்பியாரூரர் தேவாரம் | ... | E. N. தணிகாசல முதலியார் | 38, 66, 139, 180 |
| நள்ளிரவில் நகர்க் காட்சி | ... | வல்லை. பாலசுப்பிரமணியன் | 197 |
| நாட்டின் முன்னேற்றமும் நமது சமயமும் | ... | A. வரதநஞ்சைய பிள்ளை | 259, 278 |
| பதிபசு உண்மை | ... | காழி. சிவ. கண்ணுசாமி | 212 |
| பண்மயத்த மொழிப்பாவை | ... | வல்லை - பாலசுப்பிரமணியன் | 287 |
| புலால் மறுத்தலுக்கு 50 காரணங்கள் | ... | C. S சாமிநாத முதலியார் | 76 |
| பூவாளூர் சைவசித்தாந்த சங்கத் தீர்மானங்கள் | ... | | 164 |
| மதிப்புரை | ... | | 119, 239, 294 |
| மாமிச உணவை ஏன் நீக்கவேண்டும் | ... | சென்னைப் புலால் மறுத்தல் சங்கம் | 283 |
| முப்பொருள் | ... | பத்திராசிரியர் மணி - திருநாவுக்கரசு முதலியார் | 266 |
| வரவு செலவு கணக்கு | ... | | 216, 240, 264, 298, 299 |
| வாழ்த்துப்பா | ... | அ. வரதநஞ்சைய பிள்ளை | 41 |
| ஜகத்குரு யார் | ... | பத்திராசிரியர் | 73 |


ஓம்

# சித்தாந்தம்

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"


| மலர் ௧ | விபவ ஆண்டு கார்த்திகைத் திங்கள்<br>1928 ஷு டிசம்பர் மீ | இதழ் ௧௨ |
|---|---|---|


அருட்பொனே யணியேயென் அன்பேயென் அன்பான
அறிவேயென் அறிவி னூறும்
ஆனந்த வெள்ளமே யென்றென்று பாடினேன்
ஆடினேன் ஆடி நாடி
விரும்பியே கூவினேன் உலறினேன் அலறினேன்
மெய்சிலிர்த் திருகைகூப்பி
விண்மாரி யெனவென் இரு கண்மாரி பெய்யவே
வேசற் றயர்ந்தேன்யான்
இரும்புநேர் நெஞ்சகக் கள்வனா னாலும்உனை
யிடைவிட்டு நின்றதுண்டோ
என்று நீ யன்று நான் உன்னடிமை யல்லவோ
யாதேனும் அறியாவெறுந்
துரும்பனேன் என்னினுங் கைவிடுதல் நீதியோ
தொண்டரொடு கூட்டிகண்டாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே.

# முப்பொருள்

[பத்திராசிரியர் : மணி. திருநாவுக்கரசு முதலியார்]

உலகத்திலே தத்துவ ஆராய்ச்சி செய்யத் தலைப்படுவோர் எவரேனும் உலகம், உயிர், கடவுள் என்னும் முப்பொருள்களைப் பற்றியே முடிவு கட்ட வேண்டும். எல்லாம் இம்மூன்றனுள் அடங்கிவிடும். இவற்றுள் அடங்காத பொருள் ஒன்று மில்லை. இது வரை உலகத்திலே தோன்றிய தத்துவ நூல்களும் இம்மூன்றைப் பற்றியே விளம்பின. இனி வருவன தாமும் இவற்றைப் பற்றித்தான் இயம்ப வேண்டும். 'பல கலை ஆகம வேதம் யாவையினும் கருத்துப் பதி பசு பாசம் தெரித்தல்' என்றார் உமாபதி சிவனாரும். பதி-கடவுள், பசு - உயிர் - பாசம்- உலகம் என்ப. சைவசித்தாந்திகள் பதி பசு பாசம் என இவற்றை வழங்குவர். வைணவர் சித்து, அசித்து, ஈசுவரன் என்றும் ஸ்மார்த்தர் ஜகம், ஜீவன், பரம் என்றும் பரிபாஷை கொள்வர். சைவசித்தாந்தம் பதி என்னும் கடவுட் பொருளைப் போன்றே பசுவாகிய எண்ணிலாத உயிர்களும் பாசமும் நித்தியப் பொருள்கள் என்று கூறும். என்று இறைவன் உண்டோ அன்றே உயிர்களும் உண்டு என்பது சைவ சித்தாந்தக் கொள்கை. கடவுள் இயல்பை மிக நுட்பமாக எடுத்துக் காட்டிய ஸ்மார்த்தம் அப்பொருட்கு வேறாக ஒன்று மில்லை என்று கூறிக் கடவுள் இலக்கணம் பிறழப் பின் பலவற்றைக் கூறிக் குழப்பியது. கடவுட் பொருட்குப் பிறப்பு இறப்புக்களைக் கொண்டு வந்து புகுத்தி இடர்ப்படுத்தியது வைணவம். உயிர் இலக்கணத்தைச் சைவசித்தாந்தம் சுருதி, யுக்தி, அநுபவங்கட்கு இசைய எடுத்துக் காட்டியதுபோல வேறெச் சமயமும் தெளித்துரைத்த தில்லை. கிறிஸ்து, இஸ்லாம் முதலான சமயங்களோ இவ்விஷயங்களுள் நுழையவே யில்லை. பௌத்தம், சமணம் என்பவை கடவுளைப் பற்றியே கருதவில்லை. சமய அரசாய்த் துலங்குஞ் சைவசித்தாந்த முடிபே பொது அறிவிற்கும் அனுபவத்துக்கும் அன்பு நெறிக்கும் நனி பொருந்துகின்றது.

பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களும் ஒரு படித்தாக நித்தப் பொருள்களானால், பதியாகிய கடவுட்கு யாது சிறப்பு உண்டு? என்பர் சிலர். அற்றன்று; இம்மூன்றும் அநாதிப் பொருள்களானாலும் பதி எல்லா வல்லமையும் எல்லா உரிமையும் எங்கும் நிறைதலுமாகிய அளவிலாப் போற்றல் படைத்த தனிப்பொருள் ஆதலாலும், உயிர்களும் பாசமும் அவ்வாறின்மையானும் நித்தியப் பொருள் ஆதல் ஒன்று பற்றியே அவை மூன்றும் ஒப்பாதல் இல்லை என்க. கடவுள் ஆனந்தப் பொருளாக இருப்ப உயிர்கள் பாசத்தால் கட்டுப்பட்டுத் துன்பமுழக்கும் பொருள்களாக உள்ளன. உயிர்கள் கடவுளைப் போல எங்கும் வியாபகமாக உள்ளனவும் அல்ல. அவை எவ்வுடம்பை எடுத்ததோ அவ்வுடம்பு அளவே வியாபகம் உடையன. உயிர் அறிவுடைய பொருளேனும் அது முதல்வன் அறிவிக்க அறியுமே அன்றித் தானே ஒன்றையும் அறியமாட்டாது. ஆதலால் இவை தம்முள் வேற்றுமை பெரிது என்பது அறிக.

உயிர்கள் எண்ணிறந்தன என்று சைவம் கூறும். இவ்வுயிர்கள் யாவும் அநாதியிலேயே பாசத்தால் கட்டுப்பட்டுக் கிடக்கும். அஃது எதுபோலவெனின் செம்பிற் களிம்பு எங்ஙனம் இயற்கையிலேயே உண்டோ அது போல என்க. கடவுள், படிகம் எங்ஙனம் இயற்கையிலேயே தூய்மையாக உள்ளதோ அது போலத் தூய்மையாக உள்ளவர். ஆன்மாக்களை அநாதியிலேயே பற்றி அவைகளுடைய அறிவை மயக்கிக் கொண்டிருக்கும் பாசம், ஆணவமலம் என்று சொல்லப்படும். ஆணவம் என்னும் பெயர் பசுக்களை அணுத்தன்மை செய்தலினால் அதற்கு வழங்கிய காரணப் பெயர். அறிவை மயக்குதலால் மலமெனப் பட்டது.

இந்த ஆணவமலம் கடவுளைப் பற்றாதோ என்றால் பற்றாது. ஏனெனில் கடவுள் தனிப் பேரொளிப் பொருள் ஆகலின், சூரியன் முன் இருள் நில்லாதவாறுபோல் அது நிற்கலாற்றாது என்க.

இனி, இம்மூன்று பொருள்களும் எவ்வாறிருக்கின்றன எனின் கடலிலே நீரும் நீரிலே உப்பும் கலந்து நிற்றல் போல இருக்கின்றன எனக் கொள்க. கடல் எனப்படுவது நீரை அடக்கிக் கொண்டிருக்கும் இடம் அல்லது ஆகாயம் ஆகும். அதுபோலக் கடவுள் வியாபகம். அக்கடற்குள் நீர் பரவி நிற்றல் போலக் கடவுட் பொருட்குள்ளே பல கோடி உயிர்களும் அடங்கிக் கிடக்கின்றன. அந்நீரினுள் யாண்டும் நீக்கமற நிறைந் திருக்கும் உப்பைப் போல ஆணவமலம் உயிர்கடோறும் பொதிந்து கிடக்கின்றது. உயிர்களெல்லாம் இறைவன் அகண்ட வியாபகத்திலே அடங்கி நிற்றலா னன்றே 'படியைய மடியகத் திட்டான்' 'மன்னிய வேலையுள் வான் திரைபோல, நின்னிடை எழுந்து நின்னிடை ஆகியும், பெருகியும் சுருங்கியும் பெயர்ந்துந் தோன்றியும் விரவியும் வேறாய் நின்றனை' என்னும் ஆன்றோர் திருவாக்குக்கள் எழுவனவாயின.

இனி, பொருள் ஒன்றேதான் இருத்தல் வேண்டும்; பல இருத்தல் ஆகாது என்று சிலர் கூறுவர். இவர்க்கு இந்த அறிவு யாண்டிருந்து உதித்தது என்று ஆராய்தல் வேண்டும். ஒன்றே கடவுட் பொருள் என்பது உண்மையே. ஆனால் உயிர்களும் பாசமும் ஒரே காலத்திலே இருத்தல் ஆகாது என்பதற்குக் காரணம் யாதெனத். தமக்குத் தோன்றாமலே கூறிக் கொண்டிருப்பது ஓர் உண்மை யாகாது. கடவுள் உண்டு என்னும் உணர்ச்சிக்கும் வேறொரு பொருள் வேண்டு மன்றே. அன்றியும் உயிர்களாகிய நாம் இருக்கின்றோம். நாம் இல்லை என்று கூறுவோமாயின் இல்லை என்ற அறிவுடைய பொருள் ஒன்று உண்டு என்பது அது கொண்டே துணியப்படும் அன்றே.

இனி இயற்கையிலேயே ஆணவமலத்தாற் கட்டுண்டு இருட்டறையிலே கண்ணிலாக் குழவி போலக் கிடந்த உயிர்களை நோக்கி அருள் சுரந்து கடவுள் அவைகட்கு அறிவைத் தரும் பொருட்டு உலகத்தையும் உடம்பையும் படைத் தருளினன். உடம்பைப் பெற்ற உயிர்கள் அறிவு சிறிது விளங்கப்பெற்று உலகத்திலே வாழ்வனவாயின. இவ்வாறு உயிர்கள் சிறிது சிறிதாக அறிவு விளங்கப் பெற்று இறுதியில் இறைவன் திருவருளால் பாசம் நீங்கிக் கடவுளிடத்திலே இரண்டறக் கலந்து பேரின்பத்தைத் துய்க்கும்.

பாசம் நித்தப் பொருளாயின் அது உயிரை விட்டு ஒருகாலும் நீங்கு

187126

மாறில்லையே எனின், அது நீங்காது; ஆயினும் அப்பாசம் வறுத்த விதை போலத் தனது ஆற்றல் கெட்டுச் செயலின்றிக் கிடக்கும், ஆதலின் அதுபற்றி உயிர் பேரின்பத்தை நுகர்தற்குத் தடையில்லை எனக் கொள்க. சைவசித்தாந்தம் முத்தியிலும் மும்முதலும் உண்டு என்றே வலியுறுத்தும்.

'சுத்த அநுபோகந் துய்த்தல் அணு, இன்பங் கொடுத்தல் இறை, இத்தை விளைவித்தல் மலம்' என்பது காண்க. இனி முத்தி நிலையை அடைந்த உயிர் முதல்வன் போலப் படைத்தல், காத்தல் அழித்தலாய தொழில்களை இயற்றுமோ என்றால், சைவசித்தாந்தம் முத்தி நிலையிலும் உயிர் உயிரே; சிவம் சிவமே என உரைக்கும். 'உம்பர்பிரான் உற்பத்தி யாதிகளுக் குரியன், உயிர் தானுஞ் சிவாநுபவம் ஒன்றினுக்கே உரித்தே' என்றருளினார் அருணந்தி சிவம். இன்பத்து ளழுந்திக் கிடத்தலே உயிர்க்கு வேண்டப்படுவதன்றி ஐந்தொழில் இயற்றல் வேண்டுமென்பது கிடையாதென்க. உயிரும் கடவுளும் ஒன்றாய்க் கலந்தால் என்னை? அப்பொழுது இன்பஞ் சிறக்குமன்றே எனின், அற்றன்று; உயிரும் கடவுளும் ஒன்றாய்க் கலந்து விட்டால் இன்பம் துய்ப்பது ஒன்றில்லை, ஆதலின் உயிர் ஒன்றாய்க் கலத்தல் கூடாது. அன்றேல் உயிர் கடவுளுக்கு வேறாக இருந்து இன்பந்துய்க்க எனின் வேறுயின் உயிரின்கண் உள்ள குற்றம் ஒழியுமாறில்லை; கலப்பும் இல்லை. அதனால் அது நிரதிசய இன்பமாக மாட்டாது. ஆகலின் சைவசித்தாந்தம் உயிர் பாசம் நீங்கிப் பசுத்துவம் கெட்டுச் சிவமேயாகிச் சிவத்துடன் இரண்டறக் கலந்து இன்பம் நுகரும் என யாப்புறுத்தோதும்.

இனி உயிர்கள் பளிங்கு போலச் சார்ந்த தன் வண்ணமாக இருத்தலினால் மலத்தோடு சார்ந்த வழி மலமாகவே நிற்றல் போலச் சிவத்தோடு சார்ந்தபொழுது சிவமாகவே நிற்கும் என்க.

இப்பெற்றி உயிருக் குண்மையைச் சைவசித்தாந்தம் நன்கு தெளிந்து கொண்டது. இதுவே எல்லாச் சிக்குகளையும் அறுக்க வல்லதாக உள்ளது.

இதுகாறும் கூறியவாற்றால் சைவசித்தாந்தத்தின்படி பதி, பசு, பாசம் என்னும் முப் பொருள்களும் நித்தப் பொருள்கள் என்பதும் அவற்றுள் பதி எல்லா வறிவும் எல்லா ஆற்றலும் வாய்ந்த தலைமைப் பொருள் என்பதும் அஃது இயற்கையிலேயே தூய்மையுடைய பேரொளிப் பிழம்பாக உள்ளது என்பதும் அதன்முன் பாசம் நில்லாது என்பதும் பசுக்கள் எண்ணிலாதன என்பதும் அவை இயற்கையிலேயே செம்பிற் களிம்பு போலப் பாசத்தாற் கட்டுண்டு மயங்கிக் கிடக்கின்றன என்பதும் அவைகளின் பாசவீக்கத்தை ஒழிக்கும் பொருட்டே கடவுள் அவைகட்கு உடம்பு முதலியவற்றைப் படைத்துக் கொடுத்து அறிவு விளங்கச் செய்து பின்னர் அவற்றின் பாசத்தைக் கெடுத்துத் தன் திருவடியின்பத்தை அளிப்பன் என்பதும் பாசம் ஆன்மாக்கள் அறிவு முதலியவற்றை மயக்குதலினால் மலம் எனவும் பெயர் பெறும் என்பதும் அது நித்தப் பொருளாதலின் அது வலிகெட்டு முத்தி நிலையில் அடங்கு மென்பதும் அஃது இறைவனை உயிர்கள் அடைந்தால் தலை காட்டாமல் மறையும் என்பதும் ஒருவாறு பெறப்பட்டன.

'பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாசம் அநாதி
பதியினைச் சென்றணுகா பசுபாசம்
பதியணு கிற்பசு பாசம் நிலாவே'

—திருமந்திரம்.

---

# சமரசம்

J. M. N.

சமரசம் என்னும் சொற்றொடர் சமம், ரசம் என்று பிரிகின்றது. சமம் என்ற பதம் ஒற்றுமை, 'ஒப்பு' என்று பொருள்படினும், இன்னொரு பொருளும் அதற்குண்டு. அதாவது பட்சபாதமின்மை (impartiality) — மாக்டானல்ஸ் சமஸ்கிருத அகராதியைப் பார்க்க. சம்திருஷ்டி, சமதர்ஸனம் என்பதும் அதுவே. பலவற்றின் உண்மையை விசாரித்துழி, ஒன்றின்மேலும், விருப்பு வெறுப்பு மேம்படாமல், உள்ளதை உள்ளபடி யறிதல் என்பதுதான் அதன் கருத்தாகின்றது. 'இருவினையொப்பு' (கர்மசாம்யம்) என்னும் சொற்றொடரில், ஒப்பு என்ற பதமும், சமம் என்னும் பதத்தின் மொழிபெயர்ப்பேயாகி, சாதாரணமாக, ஒற்றுமையாதல் ஒத்தல் எனப் பொருள் விளக்கினும், அது உண்மையாகாது, விருப்பு வெறுப்பின்றிப் பார்த்தல் என்னும் பொருளே சிறந்தமை காண்க. எப்படியெனின், இருவினையொப்பு உண்டாதல், ஒருவன் செய்த புண்ணியமும் பாவமும், இரண்டு தட்டில் வைத்து நிறுத்தால், எப்பொழுது நிறை சரியாகுமோ, அப்பொழுதே உண்டாகுமென்கிறார்கள். இது சரியான கருத்தன்று. இரண்டு தட்டிலும் பொருள் நிறைய வைக்க எவ்விதம் நடுமுள்ளானது இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் சாயாது நடுவில் நிற்குமோ அவ்விதமே, ஒருவன் மனம், நல்வினையில் (தனக்கு இன்பம் தருவதில்) விருப்பும், தீவினையில் (தனக்குத் துன்பம் தருவதில்) வெறுப்பும் உண்டாகாதபடி, நடுவாக நிற்றலே கர்மசாம்ய மடைதலாம். இவ்வொப்பின்மையும், உண்மையுமே யன்றோ பசுவுக்கும் பதிக்குமுள்ள தாரதம்யம்.

"வேண்டுதல் வேண்டா மையிலான் அடி
[சேர்ந்தார்க்கு
யாண்டு மிடும்பை யில"

இவ்வுண்மையு மன்றோ திருப்பாற்கடல் கடைந்த இதிகாசத்திலும் காணப்படுகின்றது. தேவர்கள் முதலாகிய சகலர்கள் தாங்கள் அடைந்திருந்த வறுமையின்மேல் வெறுப்புற்று, அமிர்த முதலிய பொருள்மேல் விருப்புற்று மேல்வினையைச் செய்ததில் சகல பிராணிகளுக்கும் அதனால் உண்டாகிய இம்சையின் பயனாகிய விஷம் பிறந்து அதன் மேலும் வெறுப்புற்று வருந்தினார்கள். இதுவரையும், இறைவன் அச்சகலர்களின் கூட்டத்திற் கலவாது வறுமையினாலும் வருந்தாது, (அவன் என்றும் பிட்சாடனன்) பொருளையும் விரும்பாது நின்று, விஷத்தினால் பீடிக்கப்பட்ட தேவாதிகள் அலறி முதல்வனை நோக்கி ஓலமிட அவர்களுக்கு இரங்கி, அவ்விஷத்தையுமே தான் அமுதாக்கிக் கொண்டனன்.

ஆகவே சமம் என்ற பதத்துக்கு, ஒற்றுமை யென்னும் பொருளைவிட, அபிமானத் தழுந்தாது, உள்ளதை உள்ளபடி உணர்ந்து அதன் உண்மையையறிதல் என்னும் பொருள் சிறக்கின்றது. அது சமரசம் என்னும் சொற்றொடரையே உய்த்துணரில் இன்னும் நன்றாய் விளங்குகிறது. எப்படியெனில், ரசம் என்பது நாவினால் அறியக்கூடிய சுவையாகி, பல பொருள்களின் சுவை,

கார சாரமென்பதாம். அச்சுவையுமே ஆறுவகையா யுள்ளது. ஆறுசுவையுமே ஒன்றெனின் அது ஒருபோதும் ஒவ்வாது. அப்பொழுது ஆறென்ற பிரிவும் ஏற்படவேண்டியதில்லை. கருப்பஞ்சாற்றை விரும்பி யேற்றவன் வேப்பஞ்சாற்றையும் மகிழ்ந்து குடிக்கவேண்டும். ஒரேவிதப் பழச்சாற்றின் ஒப்புமை சொல்வதிலும் விசேஷமில்லை. பேதமில்லாத பட்சம், அபேதம் சாதித்தல் அசம்பாவிதமாகும். பேதங்கண்டவிடமே, ஓர் வித சொரூப ஒற்றுமை பற்றி அபேதம் சொன்னால் அதில் சிறப்புண்டு. அணியிலக்கணத்திலும், இவ்வுண்மையை உய்த்துணர்க. ஆகவே சமரசம் என்றதனால், எல்லாப் பழத்தின் சாரமும் ஒன்றாகா. ஒரேவித சாதிப்பழங்களின் சாரமும் ஒன்றெனல் பொருள் சிறக்கா அபேதமில்லாத விடத்து. ஆயின், சாரங்கள் வேறுபடினும், ஒரே சுவையில்லாவிடத்தும், ஒவ்வொரு பழத்தின் ரசமும் ஒவ்வொரு முக்ய உபகார குணமுள்ளது யாவர்க்கும் கைவந்தது. கருப்பஞ்சாறானது மிகவும் இனிக்கினும், சுர நோயுள்ளானுக்கு அது குணத்தைச் செய்யாது கெடுதலையே விளைவிக்கும். அப்பொழுது, வேப்பஞ் சாறானது கசக்கினும் குணத்தைக் கொடுக்கும். (வேப்பஞ்சாறும் குயினாவும் ஒரே குணமுள்ளன). கர்ப்பிணிக்கு மதுரமான பதார்த்தத்தில் வெறுப்பும், புளிப்பில் விருப்பும் உண்டாகின்றது. ஆகவே சாரங்கள் வேறுபடினும், அதனை நோக்காது, ஒன்றை விரும்பியும், ஒன்றை வெறுக்கவும் செய்யாது, அதன் உண்மைக் குண விசேஷத்தைக் கைக்கொண்டு சமயத்துக்குத் தக்கபடி அதனைப் பிரயோகப் படுத்துவதே அதன் சமரசத்துவ மாகும். இச்சமரசத்தை மதங்களில் ஏற்றிக் கூறுமிடத்தும், இவ்விதமான பொருள் ஒற்றுமை மிகவும் சிறக்கின்றது. எல்லா மதங்களும் ஒன்றாகா. தெய்வமில்லை என்கிற மதமும் சீவனில்லை யென்கிற மதமும், இவையிரண்டு முள்ளன என்று கொள்ளும் மதங்களும் ஒன்றாகா. இவ்விதமாகவே புறப்புறச் சமயங்கள், புறச்சமயங்கள், அகப்புறச் சமயங்கள், அகச்சமயங்கள் என்று எண்ணப்பட்டவைகள் ஒன்றோடொன்று ஒன்றாகா. ஆயின் இச்சமயங்களிலும் ஒவ்வொரு உண்மை கிடக்கின்றது. ஒவ்வொன்றும் ஆன்மாக்களுக்கு ஒவ்வொரு பிரயோசனத்தை உண்டாக்கியே நிற்கின்றது. அவ்வவர்களுக்கும் ஒன்று பயன்படுவது போல், மற்றையது பயன்படாது. அந்நிலையிலிருந்து அப்பொருளை யுணர்ந்து அப்பயனையடைந்து பரிபக்குவப்பட்ட காலத்தில், அதன் மேல்நிலையிலிருக்கும் பொருளைக் காணின், அதன்மேல் அவாவுறும். இதனானே எல்லாச் சமயங்களும் இறைவனால் ஆக்கப்பட்டதென்றும், அவன் ஆணை வழி நிற்கின்றதென்றும் சொல்வது எல்லாச் சமயங்களையும் சோபான மார்க்கங்களாகக் கொண்டதும் இக்கருத்தைப்பற்றியே யென்பதாம். 'இதுவாகு மதுவல்லவெனும் பிணக்கதின்றி' என்றதின் உண்மையும் இதுவாகும். "நீதியினால் இவையெல்லாமோரிடத்தே காண்பது" ஒப்பற்ற ஒரு சமயத்தில் காணக்கிடக்குமே யல்லாமல், சமயகோடிகளில், ஒவ்வொருவரும் தங்களுடன் மற்றவர்களைச் சமப்படுத்தார்கள். ஒன்றுபடார்கள். 'நீதியினால்' என்றதின், விசேடம் மிகவும் கவனிக்கற்பாலது. இச்சமரசம், விளக்கெண்ணெய், வெண்டைக்காய், சேப்பங்



கிழங்கு முதலாயின சேர்த்துச்செய்யுங் குழகறி போல்வ தொன்றன்று. அல்லது (ஒருவர் சொல்கிறார்) புத்தர்கள் விஞ்ஞானம் என்ற பொருளை அங்கீகரிக்கிறார்கள், உபநிடதங்களில், விஞ்ஞானம் என்ற ஒரு பொருள் பிரஸ்தாபிக்கப் படுகின்றது, அதற்கு ஆத்மா என்ற பொருளும் காணப்படுகின்றது, ஆகையால் புத்தர்களும் பிரம்ம வாதிகளன்றோ என்பது. இதுவும் சமரசமாகாது. ஏனெனில், இந்த விஞ்ஞானமும் இல்லாத மாயையினின்றும் உண்டாகியது. உபநிடதங்களில் விஞ்ஞானம் என்றதற்கு இரண்டு பொருள் உண்டு. மாயையினின்றும் உண்டாகிய புத்தி என்றும் அதற்கு அதிகமாகிய ஆன்மா (சீவான்மா - பரமான்மாவன்று) என்றும் சமயப் பிரயோகங்களை நோக்கியே, இவ்விரண்டில் ஒரு பொருளைக் கொள்ள வேண்டி யிருக்கின்றது. ஆகவே, எல்லாச் சமயங்களையும் சமரசபாவனை செய்ய வேண்டுவதென்பது, நீதியினால், ஆகவேண்டுமே தவிர அவரவர் நினைத்த படியு மாகாது.

மேல், நம்மான்றோர், வேதாந்த சித்தாந்த சமரசத்தையே மிகவும் போற்றியதென்னை எனின், அதன் கருத்தை விசாரிப்பாம். இதில் வேதமென்பது இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் என நால் வகைப்பட்டு, ஒவ்வொன்றும் சம்மிதை, பிராம்மணம் என இருவகைப் படும். சம்மிதை மந்திர ரூபமாகப் பெரும்பாலும் பல தேவதைகளின் ஸ்தோத்திரமாகி அக்னிஷ்டோமாதி யாகங்களில் பிரயோகப்படும். பிராம்மணத்தில் இப்பிரயோகங்களையும், யாகஞ் செய்ய வேண்டிய விதிகளையும் கூறுவதுடன், ஆரணியபாகம் என்று சொல்லப் பட்டதில், சில புராண சரித்திரங்களும், ஹிதோபதேசங்களும் உபநிடதங்களும் காணப்படுகின்றன. மந்திர பாகங்களில், அறம் பொருள் இன்பத்தை வேண்டிய பாகம் அதிகமாகவும், வீட்டு விஷயத்தைக் குறித்தது மிகவும் குறைவாகவும் காணப்படுகிறது. உதாரணமாக, இருக்கில், 'இருபட்சிகள் ஒரே மரத்தில் வசிக்கின்றது' என்றதும், "ஒன்றே சத் உள்ளது அதனை விப்பிரர்கள் வெகு விதமாய்ச் சொல்லுகிறார்கள்" என்றதும் 'நாசதசத்' சூக்தமும், இன்னு மிரண்டொன்றுமே முக்யமாய்க் காணப்படுகின்றது. இந்திரன் அக்னி வாயு முதலான தேவர்களை வரிக்கும் மந்திரங்கள் அநேகமாகவும், ருத்ரன் விஷ்ணுவைக் குறிக்கும் மந்திரங்கள் கொஞ்சமாகவும் காணப்படுகின்றன. யஜுர் வேதத்தில், சதருத்ரியம் என்னப்பட்ட பாகமே முக்ய பாகம். இதன் மத்தியில் நமசிவாய: என்னும் பஞ்சாட்சர மந்திரம் படிக்கப்படுகிறது. இந்தச் சதருத்ரியந் தான் புராண இதிகாசங்களில் எல்லாம் விதந்து எடுத்து ஓதப்படுகிறது. ஆயினும், இருக்கிலேயே ருத்ரனைச் சிவமாகவும், யக்ஞங்களுக்கு அதிபதியாயும், அதன் பலனைத் தருபவனாகவும், சுதந்தரமுள்ளவனாகவும் பரமயோகியாகவும் காட்டப் படுகின்றது. நித்திய யஜுர்வேதத்தில் இதனையே மிகவும் விளக்கி யிருக்கின்றது.

மேற்சொன்ன உபநிடதங்களை வேதாந்தம் என்றும், வேதசிரசு என்றும் கூறப்படும். இது முக்யமாய் ஞானபாகத்தை யெடுத்து ஓதும். இது பதிபசுபாசங்களின் உண்மைகளையும், பாசநீக்கத்திற் காகவேண்டிய வித்தைகளை (உபாசனைகளை)யும் கூறும். யஞ்

ஞாதிகளைச் செய்வதினால் அடையும் பலன் நித்திய மல்லவென்று அவற்றை யொதுக்கியும் தள்ளும். சிவாகமங்கள் 28-ஆக எண்ணப்பட்டு மேற்படி விஷயங்களை விரித்து, மோக்ஷலாப மடைய வேண்டி மட்டும் உபாசனைகளுக்காக அநுகாரணமான மந்திர தந்திரங்களைச் சொல்லும். இக்கிரியைகளில் உபயோகப்படும் மந்திரங்கள், அதனைச் செய்யும் முறைகளும் வேதமந்திரமும், பிராமணங்களில் கண்டதுமேயாம். ஆயின், உபயோகப்படுத்து முறை வேறு. வேதத்தின்படி அம்மந்திரங்கள் முதலானவை அறம்பொருள் இன்பமடைதற்கு வேண்டிய யாகாதிகள் சம்பந்தமாகும். சிவாகம விதிப்படி அவைகளையெல்லாம் ஞானபரமாக்கி உபயோகப்படுத்துகிறார்கள். உதாரணமாக, யாகாதிகளில், ஆடு முதலிய பிராணிகளைக் கொன்று பலியிட்டு அக்கினியில் தகிக்கின்றார்கள். மேற்கூறிய பலனை விரும்பி, ஆகம விதிப்படி, பலியென்றால், பிராணிகளைக் கொல்வதன்று. ஒவ்வொரு சீவனின் அகங்காரமாகிய தற்போதத்தை, பசுத்துவத்தை, ஞானக்கினியில் தகிப்பதே உறுதியான பலி யென்பதாம். இப்பசுத்வம் கழலவும், பதித்வம் கிடைக்கும். நந்தனார் சரித்திரத்தின் உண்மையுமிதுவே. மல சம்பந்திகளா யிருக்கும்வரையும் நாம் மாலர்கள் (பஞ்சமர்கள்). மலம் தகிதமானவுடன் பண்டிதன் (பிராமணன்) ஆகின்றான்.*

"பாசம்தகதிபண்டத்த." இந்தப் பிராம்மண பதமே நந்தி பதம், சிவபதம். இவ்விதமான தாரதம்யம் வேதங்களுக்கும் ஆகமங்களுக்கும் உள்ளதைக் கவனிக்க வேண்டும். ஆனால், அவை வேதத்தில் சூட்சமமாகக் கிடக்கின்றது. தான் அதனாலே வேதம் பொதுவென்றும் சூத்திரரூபமென்றும் ஆகமங்கள் சிறப்பென்றும் பாடியம் போன்றதென்றும் சொல்லுகிறது. மேலும் இன்னொன்று. இவ்விரண்டு முதல் நூல்களிலும், சரியை கிரியை யோகம் ஞானம் என்ற நான்கு பாதங்களும் பிரஸ்தாபிக்கப்படினும், உபநிடதங்கள் யோக பாதத்தையே அதிகமாக எடுத்துப் பேசுகின்றன. உபநிடதங்கள் முடிகின்ற பாகமெல்லாம் தத்வமசி முதலிய சிவோகம் பாவனையே எடுத்துச் சொல்லி நிறுத்தும். உபநிடதம் என்ற பதமும் யோகம் என்ற பதமும் ஒரே பொருளன. உபநிஷத்-உப+நி+சத். உப= நெருங்கவும், நி=உபசர்க்கம் மிகுதியை யுணர்த்தும்; சத்=அழிதல். அதாவது ஒன்று மற்றொன்றை நெருங்கவும் நெருங்கவும் ஒன்று அழிகின்றது என்று பொருள். யோகம் என்றது நெருக்கம், ஒன்றுதல் என்பது பொருள். இந்நெருக்கத்தில், ஒன்று கெட்டாலும், வீட்டின் பயன் இல்லை. ஒன்று அழியாதிருந்தாலு மோட்ச மடைதலும் கூடாது. ஆக, உளன் முதல் நான் என்றது வரை முற்றிலும் அழிந்து ஆன்மா சிவத்தோடு கலந்து அதுவதுவாய்ச் சிவமாகி நிற்றல் என்பது உண்மையாகும்.

"சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து
தேய்ந்து ஒன்றாம்"

"வான்கெட்டு மாருத மாய்ந்து"

"நான் கெட்ட வாபாடித்
தெள்ளேணம் கொட்டாமோ"

"நான்கெட்டு சிவமான வாபாடித்
தெள்ளேணம் கொட்டாமோ"

என்று திராவிட மெழுது மறைமொழிகளைக் கவனித்தால் பொருள் இனிது விளங்கும். மேலும், உபநிடதம் என்ற பதம், சாந்தோக்யம் (11-10) ல் உபயோகிக்கப்பட்டு யோகம் என்று ஸ்ரீ சங்கராராலும் அர்த்தம் செய்யப்பட்டிருக்கின்றது. ஆக இவ்வேதாந்த நிலை யோக பாதத்தில் நிற்கும். இந்நிலையினின்றுமே ஞான பாதத்தில் இறங்கும். மேல் நாம் ஆறாறு தத்வங்களையும் முத்தியேணியாகச் செல்ல வேண்டியிருப்பதால், இதில் இளைப்பாறுவதற்காக ஆங்காங்குச் சில தட்டுகள், தானங்கள், நிலைகள், பதங்கள், ஏற்பட்டுள்ளன. அதில் நிலைத்து இளைப்பாறியபின்தான் மேல் தட்டை நோக்கிப் படிகள் மீது கால் வைக்க வேண்டும். இம்முறையில் பொதுவாக ஆத்மதத்வம் முடிகிற வரையில் ஒரு தட்டு; வித்யாதத்வ முடிகிறவரையில் ஒரு தட்டு; அதற்குமேலுள்ள சிவ தத்துவங்களிலும் ஒவ்வொரு தட்டு. ஆகவும், உபநிடதங்களில் அநேகமாக, ஆத்மதத்வம் வரையும் ஏறியும், சிலவற்றில், வித்யாதத்வம் வரையுமே ஏறியும், ஒன்றின்மட்டுமே, சிவதத்வத்தைப் பற்றிக் குறித்து மிருக்கின்றது. ஆகமங்களின்மட்டுமே 36 தத்துவங்களைப் பூராக விவகரித்து எல்லாத் தத்வங்களும் எல்லாக் கலைகளும், நாதமும் நாதாந்தமும் தாண்டிய பதமே, முத்திப் பதமென்று கூறுகின்றது. இவ்விதமாக நாம் விசாரிக்கின்ற காலத்து, வேதம் வேதாந்தமும், ஆகமம் ஆகமாந்தமும் நமக்கு ஒரே இறைவனால் அளிக்கப்பட்டு, பலவேறு பரிபாகமுள்ள ஆன்மாக்கள் அறிந்த வண்ணம் பயன் அடையுமாறும், முடிவில் எல்லாம் ஒரே உண்மைக் கருத்தை யுடையதாகவும் காண்கின்றோம். ஆகையால் இவையிரண்டும் ஒன்றே. இரண்டும் பிரமாணமே. மூல நூல்களில் வித்தியாச மில்லை. ஆனால் ஒன்றோடொன் றொவ்வாமல் சமயங்கள் ஏற்பட்ட வித மெங்ஙனமெனில், ஆன்மாக்கள் பரி பக்குவத்துக்கு அநுகுணமாகப் படிகளும், நெறி நிலைகளும், கடைசியில் ஒரே துறையும் ஏற்பட்டிருப்பதால் அவ் வான்மாக்கள் சிற்சில படிகளிலும், நெறி நிலைகளிலும் இருந்தவாறே தடித்து நின்று அந்நிலையை உண்மை நிலையென்று நம்பி அதற்காக அம்முதல் நூல்களினின்றும் விரித்துத் தங்கள் மார்க்கத்தையே விளக்குவதாக அநுமானாதி யொப்ப விரித்துரைத்து வேறு நூல்களும் செய்திருக்கிறார்கள். இவ்விதம் பார்க்குமளவில், முற்கூறிய புறப்புறச் சமயமுதல் அகச்சமயம்வரை விரிந்த விவரம் புலப்படுகிறது. இவைகளில் புறப்புறம், புறச் சமயங்கள் வேதத்தை யொட்டாமலும் ஒட்டியும் நின்ற மார்க்கங்கள். மற்றச் சமயங்கள் வேதத்தையும் ஆகமத்தையும் ஒட்டி நின்றவைகள். இவைகளில் சிவாத்துவித சைவமானது சித்தாந்த சைவத்துக்கு மிகவும் நெருங்கிநிற்பது ஒன்று. அந்நெருக்கத்தினாலேயே அவ்விரண்டிற்கும் அபேதம் சொல்வதுண்டு. ஆயின் அவை யிரண்டிற்கும் பேத முண்டு. பேதமில்லாத வழி அபேதம் சாதித்தலும் அசங்கிதமென்று முன்னமே குறிப்பிட்டிருக்கின்றோம். சிவாத்துவித சைவம் நிமித்த காரண பரிணாம வாதமாகும். சிற்சத்திக்கும் சுத்த மாயைக்கும் வித்தியாசம்

---

* அரசடனலத்தி யாகுமக்காரம்
விரவுகனலில் வியனுருமாறி
கிரவயன்கின்மலன்றான் பெற்றநீசர்
உருவம் பிரமனுயர்குலமாமே.

—திருமந்திரம்.

ஞாதிகளைச் செய்வதினால் அடையும் பலன் நித்திய மல்லவென்று அவற்றை யொதுக்கியும் தள்ளும். சிவாகமங்கள் 28-ஆக எண்ணப்பட்டு மேற்படி விஷயங்களை விரித்து, மோக்ஷலாப மடைய வேண்டி மட்டும் உபாசனைகளுக்காக அநுகரணமான மந்திர தந்திரங்களைச் சொல்லும். இக்கிரியைகளில் உபயோகப்படும் மந்திரங்கள், அதனைச் செய்யும் முறைகளும் வேதமந்திரமும், பிராமணங்களில் கண்டதுமேயாம். ஆயின், உபயோகப்படுத்து முறை வேறு. வேதத்தின்படி அம்மந்திரங்கள் முதலானவை அறம்பொருள் இன்பமடைதற்கு வேண்டிய யாகாதிகள் சம்பந்தமாகும். சிவாகம விதிப்படி அவைகளையெல்லாம் ஞானபரமாக்கி உபயோகப்படுத்துகிறார்கள். உதாரணமாக, யாகாதிகளில், ஆடு முதலிய பிராணிகளைக் கொன்று பலியிட்டு அக்கினியில் தகிக்கின்றார்கள். மேற்கூறிய பலனை விரும்பி, ஆகம விதிப்படி, பலியென்றால், பிராணிகளைக் கொல்வதன்று. ஒவ்வொரு சீவனின் அகங்காரமாகிய தற்போதத்தை, பசுத்துவத்தை, ஞானாக்கினியில் தகிப்பதே உறுதியான பலியென்பதாம். இப்பசுத்வம் கழலவும், பதித்வம் கிடைக்கும். நந்தனார் சரித்திரத்தின் உண்மையுமிதுவே. மல சம்பந்திகளா யிருக்கும்வரையும் நாம் மாலர்கள் (பஞ்சமர்கள்). மலம் தகிதமானவுடன் பண்டிதன் (பிராமணன்) ஆகின்றான்.*

“பாசம்தகதிபண்டத்த.” இந்தப் பிராம்மண பதமே நந்தி பதம், சிவபதம். இவ்விதமான தாரதம்யம் வேதங்களுக்கும் ஆகமங்களுக்கும் உள்ளதைக் கவனிக்க வேண்டும். ஆனால், அவை வேதத்தில் சூட்சமமாகக் கிடக்கின்றது. தான் அதனாலே வேதம் பொதுவென்றும் சூத்திரரூபமென்றும் ஆகமங்கள் சிறப்பென்றும் பாடியம் போன்றதென்றும் சொல்லுகிறது. மேலும் இன்னொன்று. இவ்விரண்டு முதல் நூல்களிலும், சரியை கிரியை யோகம் ஞானம் என்ற நான்கு பாதங்களும் பிரஸ்தாபிக்கப்படினும், உபநிடதங்கள் யோக பாதத்தையே அதிகமாக எடுத்துப் பேசுகின்றன. உபநிடதங்கள் முடிகின்ற பாகமெல்லாம் தத்வமசி முதலிய சிவோகம் பாவனையே எடுத்துச் சொல்லி நிறுத்தும். உபநிடதம் என்ற பதமும் யோகம் என்ற பதமும் ஒரே பொருளன. உபநிஷத்-உப+நி+சத். உப= நெருங்கவும், நி=உபசர்க்கம் மிகுதியை யுணர்த்தும்; சத்=அழிதல். அதாவது ஒன்று மற்றொன்றை நெருங்கவும் நெருங்கவும் ஒன்று அழிகின்றது என்று பொருள். யோகம் என்றது நெருக்கம், ஒன்றாதல் என்பது பொருள். இந்நெருக்கத்தில், ஒன்று கெட்டாலும், வீட்டின் பயன் இல்லை. ஒன்று அழியாதிருந்தாலு மோட்ச மடைதலும் கூடாது. ஆக, உளன் முதல் நான் என்றது வரை முற்றிலும் அழிந்து ஆன்மா சிவத்தோடு கலந்து அதுவதுவாய்ச் சிவமாகி நிற்றல் என்பது உண்மையாகும்.

“சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து
தேய்ந்து ஒன்றாம்”

“வான்கெட்டு மாருதமாய்ந்து”

“நான் கெட்ட வாபாடித்
தெள்ளேணம் கொட்டாமோ”

“நான்கெட்டு சிவமான வாபாடித்
தெள்ளேணம் கொட்டாமோ”

என்று திராவிட மெழுது மறைமொழிகளைக் கவனித்தால் பொருள் இனிது விளங்கும். மேலும், உபநிடதம் என்ற பதம், சாந்தோக்யம் (11.10) ல் உபயோகிக்கப்பட்டு யோகம் என்று ஸ்ரீ சங்கராராலும் அர்த்தம் செய்யப்பட்டிருக்கின்றது. ஆக இவ்வேதாந்த நிலை யோக பாதத்தில் நிற்கும். இந்நிலையினின்றுமே ஞான பாதத்தில் இறங்கும். மேல் நாம் ஆறாறு தத்வங்களையும் முத்தியேணியாகச் செல்ல வேண்டியிருப்பதால், இதில் இளைப்பாறுவதற்காக ஆங்காங்குச் சில தட்டுகள், தானங்கள், நிலைகள், பதங்கள், ஏற்பட்டுள்ளன. அதில் நிலைத்து இளைப்பாறியபின் தான் மேல் தட்டை நோக்கிப் படிகள் மீது கால் வைக்க வேண்டும். இம்முறையில் பொதுவாக ஆத்மதத்வம் முடிகிற வரையில் ஒரு தட்டு; வித்யாதத்வ முடிகிறவரையில் ஒரு தட்டு; அதற்குமேலுள்ள சிவதத்துவங்களிலும் ஒவ்வொரு தட்டு. ஆகவும், உபநிடதங்களில் அநேகமாக, ஆத்மதத்வம் வரையும் ஏறியும், சிலவற்றில், வித்யாதத்வம் வரையுமே ஏறியும், ஒன்றின்மட்டுமே, சிவதத்வத்தைப் பற்றிக் குறித்து மிருக்கின்றது. ஆகமங்களின்மட்டுமே 36 தத்துவங்களைப் பூராக விவகரித்து எல்லாத் தத்வங்களும் எல்லாக் கலைகளும், நாதமும் நாதாந்தமும் தாண்டிய பதமே, முத்திப் பதமென்று கூறுகின்றது. இவ்விதமாக நாம் விசாரிக்கின்ற காலத்து, வேதம் வேதாந்தமும், ஆகமம் ஆகமாந்தமும் நமக்கு ஒரே இறைவனால் அளிக்கப்பட்டு,பலவேறு பரிபாகமுள்ள ஆன்மாக்கள் அறிந்த வண்ணம் பயன் அடையுமாறும், முடிவில் எல்லாம் ஒரே உண்மைக் கருத்தை யுடையதாகவும் காண்கின்றோம். ஆகையால்இவையிரண்டும் ஒன்றே. இரண்டும் பிரமாணமே. மூல நூல்களில் வித்தியாச மில்லை. ஆனால் ஒன்றோடொன்றொவ்வாமல் சமயங்கள் ஏற்பட்ட வித மெங்ஙனமெனில், ஆன்மாக்கள் பரி பக்குவத்துக்கு அநுகுணமாகப் படிகளும், நெறி நிலைகளும், கடைசியில் ஒரே துறையும் ஏற்பட்டிருப்பதால் அவ் வான்மாக்கள் சிற்சில படிகளிலும், நெறி நிலைகளிலும் இருந்தவாறே தடித்து நின்று அந்நிலையை உண்மை நிலையென்று நம்பி அதற்காக அம்முதல் நூல்களினின்றும் விரித்துத் தங்கள் மார்க்கத்தையே விளக்குவதாக அநுமானாதி யொப்ப விரித்துரைத்து வேறு நூல்களும் செய்திருக்கிறார்கள். இவ்விதம் பார்க்குமளவில், முற்கூறிய புறப்புறச் சமயமுதல் அகச்சமயம்வரை விரிந்த விவரம் புலப்படுகிறது. இவைகளில் புறப்புறம், புறச்சமயங்கள் வேதத்தை யொட்டாமலும் ஒட்டியும் நின்ற மார்க்கங்கள். மற்றச் சமயங்கள் வேதத்தையும் ஆகமத்தையும் ஒட்டி நின்றவைகள். இவைகளில் சிவாத்துவித சைவமானது சித்தாந்த சைவத்துக்கு மிகவும் நெருங்கிநிற்பது ஒன்று. அந்நெருக்கத்தினாலேயே அவ்விரண்டிற்கும் அபேதம் சொல்வதுண்டு. ஆயின் அவை யிரண்டிற்கும் பேத முண்டு. பேதமில்லாத வழி அபேதம் சாதித்தலும் அசங்கிதமென்று முன்னமே குறிப்பிட்டிருக்கின்றோம். சிவாத்துவித சைவம் நிமித்த காரண பரிணாம வாதமாகும். சிற்சத்திக்கும் சுத்த மாயைக்கும் வித்தியாசம்

---

* அரசடனலத்தி யாகுமக்காரம்
விரவுகனலில் வியனுருமாறி
நிரவயன்னின்மலன்றாள் பெற்றநீசர்
உருவம் பிரமனுயர்குலமாமே.

—திருமந்திரம்.

பாராட்டாது 36 தத்துவங்களுக்— பட்ட நிலையில் நிற்பது. ஸ்ரீ நீலகண்ட சிவாசாரியாரும், ஸ்ரீமத் அப்பையதீக்ஷித சுவாமிகளும், வீரசைவாசாரியர்களும் இந்நிலையில் நின்றவர்கள். சத்திவிஷயமாக இவ்விதமா யிவர்களுக்கும் சித்தாந்த சைவர்களுக்கும் பேதமுளதேனும், மற்றெல்லா விஷயங்களிலும் ஒற்றுமை யுண்டு. அதுவு முக்கியமாக ஆன்மாவும், இறைவனும் வேறு வேறு பொருள்கள் என்பதில் மிகவும் திடசித்தமுடையவர்கள். இது ஒன்று முக்கியமாகக் கைக்கொள்ளவும், மற்றுள்ள வித்யாசங்கள் அவ்வளவு பெரிதாகத் தோற்றா. சித்தாந்த சைவர்களும், மாயைதனுவிளக்காகக்கொண்டு, இறைவனால் உபகரிக்கப்படும் பரிக்கிரக சத்தியாகச் சொல்லுகிறார்கள். ஆயின் இப்பரிக்கிரகசத்தியே, இறைவனுடைய அபின்னசக்தியா யிருந்தாலும் அதனால் விளையும் தீமை ஒன்று மில்லை யென்க. ஆயின், பதிபசுக்களின் அபேதம் சொல்லுவதினால் விளையும் தீங்கு இவ்வளவென்று எண்ண வொணாது. ஆதலாற்றான் சிவாத்துவித சைவத்துக்கும் சித்தாந்த சைவத்துக்கும் அபேதம் பாராட்டுவது. மேலும், யோகமென்பது சரியை முதல் சிவாத்துவித சைவம் வரை ஓடி நிற்குமானாலும், சிவாத்துவித சைவத்தைச் சிறப்பாக நின்றுணர்த்தும். ஞான மென்பதும் சரியை முதல் சுட்டிறந்து நின்ற நிலையாகிய உண்மைமுக்தி நிலையினையும் அதின் அனுபவப் பேறாகிய நிஷ்கள சிவத்தையும் குறிப்பிக்கினும், சிறப்பு வகையில், சிவத்தோடு கலந்து இரண்டற நின்ற நிலையினையே உணர்த்தும். இது போலவே வேதாந்தமும் சித்தாந்தமும் என்க. ஆகவே, யோகாந்தம், போதாந்தம், [illegible] இந்தப் கொஞ்சம் கொஞ்சம் பேதப்படினும் இவை யெல்லாம் சிவாத்துவிதமாகிய வேதாந்தத்தில் அடங்கும். தனி ஞானமானது சித்தாந்தத்தையே குறிக்கும். இதனால் நம் அருள்மொழித் தேவர் தம் "வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க" என்ற திருவாக்கும் விளங்கினமை காண்க. இக்கருத்தைத்தான், "தானான வேதாந்தம் தான் என்னும் சித்தாந்தம்" என்னும் திருமந்திரத்துக்கும் பொருளாக மதிக்கின்றாம். பின்வரும் அடிகளை யோசிக்கும் காலையும் அதன் கருத்து அவ்வாறே யிருக்க வேண்டு மென்பது தெரிகிறது.

"தானான வேதாந்தம் தான் என்னும் சித்தாந்த
மானா துரியத்து அணுவன் தனைக்கண்டு
தேனார் பராபரஞ் சேர்சிவ யோகமாய்
ஆனாமலமறற் றருஞ்சித்தி யாதலே."

தான் என்னும் பதம் முப்பாலினும் மூவிடங்களிலும் வரும். ஆகவே சீவன் பரன் என இரண்டு பொருளிலும் வரும். "தானலா துலக மில்லை சகமிலா தடிமை யில்லை." "சகமலா தடிமை யில்லை தானலாற் றுணையு மில்லை" என்ற மறைமொழிகள் விளக்கும்.

"யானாகிய என்னை விழுங்கிவெறுந்
தானாகி நின்றது தற்பரமே"

என்ற அனுபூதிச் சொல் இன்னும் விளக்கும். ஆகவே திருமந்திரத்தின் பொருள்: நான்தான் (சிவம்) ஆன என்றும் சிவோகம் பாவனையாகிய யோக நிலையில் நிற்பது வேதாந்தம். தான் (சிவம்) ஒன்றே என்றும் வேறொன்றும் திரிஸ்யமில்லை என்றும் ஆன்மா சிவாநந்தத்தில் அழுந்தி நிற்கும் ஞானநிலையதாகியது சித்தாந்தம். அதனை விரித்துரைக்குங் கால், ஆத்ம தரிசன



ம்டைந்து அவ்வாத்மாவில் சிவத்தைக் காண்கை சிவயோகமாகிய வேதாந்தம். ஆணவம் முற்றும் கழன்று யாராலும் பெறுதற்கரிய சித்தியடைதல் சித்தாந்தம். இவ்விதம் பொருள் கூறுதல், ஆன்மா ஒன்று உண்டு என்று சொல்லுகிற மார்க்கம் சித்தாந்தம் என்பதைவிட, எம் சிற்றறிவிற்கு சிறப்பாகக் காண்கின்றது. நிரீசுவர சாங்கியமுதல், ஆத்மா உண்டு என்று சொல்லுகிற மார்க்கங்கள் அநேகமுளவாமாதலால், இதற்கு அடுத்த திருமந்திரத்திலும் நாம் விளக்கிய பொருளை வற்புறுத்துவதற்காகவே, "அத்தன்பா லன்பால் அடைதல் சித்தாந்தமே" என இறுதி நிலையினையே சித்தாந்தமாகவும் கட்டளையிட்டிருக்கின்றார். * சமாதியென்பதும் யோகத்தின் முதிர்ச்சியே யானதால் அதனையே நான்தான் ஆகும் அல்லது தான் அவன் ஆகும் சமாதியென்றும் கூறி, வேதாந்தம் யோகமார்க்க மென்றே தெளிவுறுத்தார். இவ்விதமான சமாதி கைகூடினால், மற்றெல்லா நிலைகளும் அடைந்தபடி யென்றும் அத்திருமந்திரத்தில் கூறியுள்ளார். ஆறந்தமாகக் கூறியதும் பொதுவாக, சித்தாந்தத்தை யொழிந்த மற்ற நாலந்தங்களும் வேதாந்தத்தில் அடங்குமெனத் தோற்றுகின்றது. போதாந்தத்தை வேதபோதாந்த மென்று உமாபதி சிவமும் கூறியது சான்றா மென்க.

இதுநிற்க, நாம் மேல் முதல் நூல்களை யநுசரித்துப் பலரும் அநேக நூல்களியற்றி யுள்ளதாகச் சொன்னோம். அவற்றில், சாரீரகமீமாம்சா சூத்திரமென்று ஒன்று பாதராயணரென்பவரால் செய்யப்பட்டுள்ளது. இவரும் வேதவியாசரும் ஒருவரோ வேறோ எனச் சிலர் சந்தேகிக்கின்றார்கள். இந்நூலும், எக்காலத்துப் பிறந்தது என்பதும் தெரியவில்லை! நம் சங்கநூல்கள் காலத்தும் மாணிக்கவாசகர் திருமூலர் ஔவையார் முதலானவர்கள் காலத்தும் இருந்திருப்பதாகத் தெரியவில்லை. இந்நூலில் ஒவ்வொரு சூத்திரங்களிலும், உபநிஷத் வாக்கியத்தை யுதகரித்து

---

* பின்வரும் திரு மந்திரங்களையும் பார்க்க.

"நூலது வேதாந்தம் நுண்சிகைஞானமாம்"
"வேட்கை விடுநெறி வேதாந்தம்"
"வேதாந்தமாவது வேட்கையொழிந்திடம்"
(யோகம் சித்தநிரோதம் என்ற பொருள்பற்றி)
"பரசித்திக்குவித்தாஞ் சிவோகமேசேர்தல்"
"சிவமானஞானந் தெளியவொண்சித்தி"
..............................................
சிவமானஞானஞ் சிவாநந்தநல்குமே"
"..............................புலன்கரணம்புந்தி
"சாதாரணங்கெடலாஞ் சகமார்க்கம்"
(யோகம் சாரூபம்.)
"இங்கிவராக இழிவற்றயோகமே"
"யோகம்சிவரூப முற்றிடும்"
(சைவம் சாயுச்சியம்.)
"சைவம்சிவனுடன் சம்பந்தமாவது"
"சைவஞ்சிவானந்த சாயுச்சியமே"
"தானவனாகித்தானைந் தாமலஞ்செற்று
மோனமதாமொழிப் பான்முத்தராவது
மீனமில்ஞானானு பூதியிலின்பமுந்
தானவனுயற்றல் ஆனசன்மார்க்கமே"
"ஞானத்தில்ஞானமே நானெனதென்னுமல்
ஞானத்தில்யோகம் நாதாந்தநல்லொளி"
"ஞானிக்குக்காயம் சிவமேதனுவாகும்"
..............................................
"மேனிற்கும்யோகிக்கு விந்துவும்நாதமும்"
"விஞ்ஞானத்தார்க் காணவமேமிகுதனு."
"ஒன்றுமிரண்டு மிலதுமாயொன்றாக
நின்றுசமய நிராகாரநீங்கியே
நின்றுபராபரை நேயத்தைப்பாதத்தாற்
சென்றுசிவமாதல் சித்தாந்தசித்தியே"

# "நாட்டின் முன்னேற்றமும் நமது சமயமும்"

[வித்துவான் - A. வரதநஞ்சைய பிள்ளை அவர்கள்]

(மலர் 1. இதழ் 11, பக்கம் 262-ன் தொடர்ச்சி)

எந்தத் தேசமும் திரண்ட பொருட்பெருக்கினாலேயே முன்னேற வேண்டும். ஆகவே, பொருளை யீட்டும் வாயில்களாகிய கல்வி, கைத்தொழில், வாணிபம், உழவு என்னும் இந்நான்கும் மிக நன்னிலைமையை அடைய மக்கள் அவ்வத் துறைகளில் முயல வேண்டும். மேலும் இந்நாட்டுப் பொருள் பிற நாடுகளில் மிக்குச் சென்றொழியாமல் பாதுகாக்கப்படுவதுடன், பிற நாட்டுப் பொருட்களை நம் நாட்டில் மிகுவிக்கும் வழியையும் அறிந்தொழுக வேண்டும். இவற்றுள் கல்வியோ மிகக் குறைவு. 100-க்கு 90-க்கு அதிகம் படியாதார் தொகையுள்ளது. கைத்தொழிலைப் பற்றிப் பேசவேண்டியதில்லை. அயல் நாட்டுக்கைத் தொழில் நம் நாட்டின் பொருளாதாரத்தை முற்ற வுறிஞ்சிக் கொண்டு கொழுத்து வருகின்றது. வாணிபமோ பிற நாட்டினாக்கத்தைக் குறித்ததாகவே நிகழ்கின்றது. உழவுத் தொழில் பண்படாத பழைய முறைகளை அநுசரித்துச் சென்ற நெறியே செல்கின்றது. நம்மில் வேற்றுமையும் வெறுப்பும் தன்னல விருப்பமும் நிறைந்திருக்க, ஆள்வோரைக் குறை கூறி ஆவதில்லை. தேச நன்மைக் குரிய வழிகளைச் சுருங்கக் கூறின், எங்கும் கட்டாயக் கல்வி, இலவசக் கல்வி பெருகி, ஜனங்களுக்குத் தேசத்தின் தற்காலச் சீர்கேட்டையும் மற்றை நாடுகள் செல்வம் பெறும் வழிகளையு முணர உணர்த்தல் வேண்டும்.

நமது செல்வச் சிறுவர் அயல் நாடுகளுக் கேகி அங்கங்கே யுள்ள சிறந்த கைத்தொழில், யந்திர நிர்மாணம் முதலியவற்றில் பயின்று வரச்செய்து நம் நாட்டின் சாமான்களையே அபிவிருத்தி செய்து உபயோகித்து வருதல் வேண்டும்.

நமது சமய உண்மை நெறிகளின் மேல் மாசு படிந்துள்ளவற்றை நற்போதங்களால் விளக்கி மக்களின் அறியாமையையும் வீண் கருவத்தையும் போக்க வேண்டும். மனிதப் பிறப்பினர் யாரும் ஜாதி குலம் முதலியவற்றால் மட்டும் சிறந்தோராகார், யாவரிடத்து நல்லொழுக்கம், ஜீவகாருண்யம், அன்பு, இரக்கம், கடவுள்பக்தி, சமய நம்பிக்கை, தேசாபிமான மிருக்குமோ அவர்களே உயர்ந்தோர் எனக் கூறும் உண்மையைப் பலர்க்கும் தெரிவித்தல் வேண்டும்.

தீண்டாதாரைக் கோவில்களில் திடும் பிரவேசம் செய்துவிட்டு உயர்த்தப்பட்டு விட்டார்கள் என்று சந்தோஷிப்பது வீண் கனா. அவர்கள் உண்டி, உடை, கல்வி முதலியவற்றில் குறைபாடற ஜன சமூகத்தில் அங்கீகரிக்கத் தக்க நற்குணம் நற்செய்கை ஒழுக்கமுடையாராகி, நாளடைவில் மேம்படப் பல்லாற்றானும் ஓயாதுதவல் வேண்டும்.

எல்லாச் சமயங்களும் தாம் தாம் நின்றபடியே நின்று, எந்தக் கடவுளை வழிபடினும் தம்மிற் பிணக்கமற ஒரு நற்பலனையே அளிக்கின்றன. ஆதலின் அவரவர் விருப்பத்திற் கேற்ப ஏதேனும் ஒன்றைக் கைக்கொண்டு அந்நியமப்படி ஒழுகல் வேண்டுமெனப் போதித்தல் வேண்டும்.



பழைய புராணங்களில் அப்படிச் சொல்லப்படுகிறது, அது பொய், இது புளுகு என்று தூஷிப்பதை விட்டு நல்லனவும் உயர்ந்தனவும் உண்மையுணர்த்துவனவும் ஆன்றோர் கொள்கைக் கிணங்கியவையு மானவைகளைக் கைக்கொண்டு ஏனையவற்றைப் புறக்கணித்தல் வேண்டும்.

ஏற்கனவே பலஜாதித்வேஷம் மதச் சண்டை, பாஷை வேற்றுமை மல்கிக் கிடக்கும் இந்நாட்டில், ஒவ்வொரு சமயத்திலு முள்ளவரே ஒருவரோடொருவர் விரோதிக்கும் வழியில் தலையிடல் தீது.

யானையைத் தேடப்போனவன் குடத்தில் கையிட்டுத் தேடுவதுபோல் தேசாபிமான மேற்கொண்டவர்கள் சமயத்தைச் சபிப்பது வழியல்லாவழி. சமயங்களின் உன்னத லக்ஷியங்களும் பாராட்டத் தக்க மேன்மையான உண்மைத் தத்துவங்களும் இன்னவென்றறியாமல் ஏதோ சில புராணக் கதைகளைக் கொண்டும் குறுகிய நோக்க முடையவர்கள்பாற் றோன்றும் வெறுப்பை முன்னிட்டும் அடாதன கூறுவ தழகாகாது.

தேசாபிமானிகளைச் சமயந் தடுப்பதில்லையென இதுகாறும் கூறித் தேசவிருத்தியைத் தடுக்கும் மெய்த்தடைகளையும் சுட்டினோம். இனித் தேசாபிமானிகளுக்கு எல்லா வழிகளிலும் உறுதுணையாக நின்று அவர்களை ஊக்கிச் செலுத்தி வெற்றி பெறுதற்கு வேண்டிய பல சிறந்த சாதனங்கள் நம் சமயத்தில் ஏராளமாக வுள்ளன என்பதனையும் விவரிப்போம்.

(தொடரும்)

# சிவமும் சத்தியும்

[D. கோபால செட்டியார், முன் "நியு ரிபார்மர்" பத்திராதிபர்]

(மலர் 1, இதழ் 11, பக்கம் 248-ன் தொடர்ச்சி)

சொரூப முள்ளபோது தடத்தமு முண்டு. அவைகளில் ஒன்றின்றி மற்றொன்று கிடையாது. சொரூப நிலை தடத்த நிலையினால் அறியப்படுகிறது. தடத்த நிலையின்றிச் சொரூப நிலை இல்லை. தடத்த நிலைக்கு ஏகாத சொரூப நிலையுள்ள பொருள் உண்டோ என்றும், சொரூப நிலையிலிருந் தல்லாமல் தடத்த நிலை உண்டோ என்றும் யோசிக்கின், இதன் உண்மை வெளிப்படும். அவைகளில் ஒன்றிருந்தால் மற்றொன்று முண்டு. இல்லாவிடில் மற்றொன்று மில்லை என்பது பிரமாண மாகையால் அவைகள் இரண்டும் ஒன்று என்றும், ஆனால் வேறாய் ஒன்றென்று மேற்படும்.

அன்பைப் போன்றும் அறிவைப் போன்றும் அவைகள் ஒன்றா யிருக்கின்றன. அன்பு - சொரூபம். அறிவு - தடத்தம். ஏனெனின், அறிவிலன்றி எந்த அன்பும் கிடையாது. அன்பிலன்றி எந்த அறிவுங் கிடையாது. ஆதலால், அன்பு அறிவிலிருக்குங் கால் அது தடத்தநிலைக்கு வருகிறது. சிந்தனையில், அவைகள் வரையறுக்கக் கூடியதாயும் செயலில் அங்ஙனம் செய்ய முடியாததாயுமிருக்கிற ஓர் ஏகமாக அவைகளிருக்கின்றன. அவைகள் சிந்தனையில் வேறு படுத்தக் கூடியவையாயும், செயலில் கூடாதவையாயு மிருப்பதால்தான் அவைகள் வேறாய் ஒன்றென்று கூறி

யது. சிவபெருமானிடத்தும் கூடச் சொரூபமும் தடத்தமும் ஆன்மாவையும் சரீரத்தையும் போன்றன என்று சுவீடன்பர்க் கூறுகின்றனர். ஏனெனில், சரீரமன்றி ஆன்மா நிலைபடாது. ஆன்மாவின்றிச் சரீரம் நிலைபடாது. இம்மட்டில்தான் இந்த உவமை கூறப்பட்டது. சிவபெருமானது ஆன்மாதான் அவரிட சொரூப நிலை. அவரது பரம சரீரம் அவரது தடத்த நிலை. ஆன்மாவானது சரீரத்தை நீக்கி, சிந்தனையையும் அறிவையும் பெற்றிருக்கு மென்பது பொய்க் கோலமான பேச்சு. ஏனெனிலோ, உலகத்தில் பெற்றிருந்த ஜடப்போர்வை நீக்கப்பட்ட பின்னர், ஒவ்வொருவனுடைய ஆன்மாவும் சூக்கும சரீரத்தை யடைகிற தென்க.

சொரூப நிலையிலுள்ள பொருள் தடத்த நிலைக்கு வராவிடின் சொரூப நிலை சொரூபநிலை யாகாது. ஏனெனின், அதற்கு முன்னர் அது ஒரு வடிவத்தி லில்லை எனவும், ஒரு வடிவத்தி லிருந்தா லொழிய அதற்குக் குணமில்லை யெனவும், குணமில்லாதது சூனியமா மெனவும் கூறுக. சொரூப நிலையிலுள்ள பொருளிலிருந்து வெளிப்படும் பொருள், அது சொரூப நிலையிலுள்ள பொருளிலிருந்து வெளிப்பட்டபடியினால், சொரூப நிலையிலுள்ள பொருளுடன் ஒன்றுபடுகிறது. ஆகையினால், ஒரு பரஸ்பர ஐக்கியம் உண்டாகிறது. அதனால் ஒவ்வொன்றும் தன்னிலிருப்பது போல் மற்றதிலு மிருக்கிறது.

முதல்வனுடனும் சிற்சத்தியுடனும் சம்பந்தத்தா லிருக்கும் சமவேதமாகிய திரோதான சத்தி வடிவாய் முதல்வன் சிற்சத்தியில் பிரிப்பின்றி நிற்பன். வடமொழிச் சிவஞான போதம் இரண்டாம் சூத்திரத்து முடிவில் ஆணை முதல்வனோடு சமவேதமாய் நிற்குமென ஓதியதானால் இதற்கு முரணாகாது. எதனாலெனின், சத்தி இறைவனில் சமவேதமாதலின் அம்முறை பற்றி வடநூலிற் கூறினார். உயிர்களோடு கலந்து நிற்கும் இறைவன் நிலை திரோதான சத்தியெனப்படும் என்ற முறை பற்றி இந்நூலின் இறைவன் சிற்சத்தியில் சமவேதமாய் நிற்பன் என்று கூறியது. சிவஞான முனிவர் திராவிட பாடியத்தில், "அவ்விரண்டும் பொருளால் வேறன்மை புணர்க" என்கிறார்.

அன்பினதும் அறிவினதும் புணர்ச்சி பரஸ்பரமானது. இந்த பரஸ்பர சம்பந்தத்தைத் தான் "சிவன் சத்தியை ஈன்றும், சத்தி சிவத்தை ஈன்றும்" என்று கூறியது. இதை ஞானிகள் மட்டும் அறிவார்கள். சுட்டறிவினோராகிய நாம் அந்த பரஸ்பர சம்பந்தத்தை அறிதல் முடியாது. ஆயினும் அவ்விதப் புணர்ச்சி அன்பிற்கும் அறிவுக்கும் உண்டென்று அறிவு கண்டு பிடிக்கக் கூடும். ஆனால் இந்தப் புணர்ச்சியானது பரஸ்பர மானதென்று அறியமுடியாது. அந்தப் பரஸ்பர புணர்ச்சி அறியப்படில், இம்மேற்கோள் விளங்கும். எவனும் ஆசை யின்றி நினைக்க முடியாதாகையால், ஆசையினதும் சிந்தனையினதும் புணர்ச்சியி லிருந்து, அவ்விதப் புணர்ச்சி யுளதென்று விசத மாகிறது. விசாரணை செய்ய இஷ்ட முள்ளவன் ஆசையானது சிந்தனையின் உயிரென்றும், ஆசை யிருப்பதுபோல், சிந்தனை யிருக்கிற தென்றும் அறிந்து கொள்ளலாம். ஒன்று தூண்டப்பட்டால், மற்றதும் தூண்டப்படுகிறது. ஒன்று குளிர்ந்தால், மற்றதும் அம்மாதிரியே யாகிறது. இக்காரணத்தினால் தான் ஒருவன் களிப்பு நிலையிலிருக்கும்போது களிப்புடன் நினைக்கிறான்; விசனத்திலிருக்கும்போது விசனமாய் நினைக்கிறான்; அங்ஙனமே கோபமா யிருக்கும்போது, கோபமாய் நினைக்கிறான். மற்றவைகளும் இம்மாதிரியே, அன்பினிடவும் ஞானத்தினிடவும் புணர்ச்சியும் இங்ஙனமே யுளது. ஏனெனின், எல்லா ஆசையும் அன்பைச் சேர்ந்த படியினாலும், எல்லாச் சிந்தனையும் ஞானத்தைச் சேர்ந்த படியினாலு மென்க.

அந்த ஐக்கியமானது பரஸ்பரமானதென்பதை ஆசையானது சிந்தனையை உண்டாக்குகிற தென்பதும், சிந்தனையானது ஆசையை மறுபடியும் உண்டாக்குகிற தென்கிறதுமான காரணத்தினால் கூட நிச்சயப்படுத்தலாம். ஆனால், மனிதனில் இருதயத்துக்கும் சித்தத்திற்கும், சுவாசாசயங்களுக்கும் புத்திக்கும் பூர்ண காரண காரிய சம்பந்தமிருப்பதால், இருதயத்தினிடவும் சுவாசாசயங்களிடவும் பரஸ்பர சேர்க்கையிலிருந்து அது முக்கியமாய் நிச்சயப் படுத்தப் படலாம். ஆகவே, இருதயத்தினிடவும் சுவாசாசயங்களிடவும் சேர்க்கையால், சித்தத்தினிடவும் புத்தியினிடவும், அதனால் அன்பினிடவும் ஞானத்தினிடவும் சேர்க்கையைப்பற்றி நாம் ஒருவாறு இந்த மேற்கோளை அறிந்து கொள்ளவும் கூடும்.

இரண்டாவது. மகிழ்ந்து இருவரும் புணர்ந்து உலகுயிர் எல்லா மீன்றது.

## சிவம் சத்தி திருமணம்

சேதன அசேதன பிரபஞ்சத்தில் ஒவ்வோர் பகுதியிலும் நன்மையினிடவும் உண்மையினிடவும் விவாக முளது. இது ஏன் எனில், நன்மையானது அன்புக்கும், உண்மை ஞானத்துக்கும் சேர்ந்த படியினாலென்க. இவ்விரண்டும் இறைவனிட மிருந்து வருகின்றன. அவரிட மிருந்தே எல்லாம் சிருட்டிக்கப் பட்டன. இந்த விவாகம் மனிதனில் எங்ஙன மிருக்கின்ற தென்பது இருதயத்தினிடவும் சுவாசாசயங்களிடவும் சேர்க்கையி லிருந்து சந்தேக மற அறியலாம். ஏனெனில், இருதய மானது அன்பு அல்லது நன்மைக்கும், சுவாசாசயங்கள் ஞானத்துக்கும் உண்மைக்கும் அன்னுவயப் படுகின்றன. இதன் விவரமெல்லாம் நம்மிட பரம இச்சா ஞான தீபிகையில் பரக்கக் காணலாம். அன்பானது ஞானத்துக்கு எங்ஙனம் விவாக வாக்குத் தத்தஞ் செய்து, பின்னிட்டு அதனுடன் இல்வாழ்க்கைக்கு உடன்படுகிறதென்பதை அந்தத் திருமணத்தாலறியலாம். அன்பானது ஞானத்துக்கு ஓரில்லம் அல்லது விவாக அறை ஆயத்தம் செய்கிறபடியினால் விவாக வாக்குத் தத்தம் செய்கிறது என்றனம். அது பிரியங்களினால் ஞானத்தைத் தன்னுடன் சேர்த்து, அந்த இல்லத்தில் ஞானமானது பிரமாணிக்கப் படுவதால் ஞானத்தை விவாகம் செய்துகொண்டது எனலாம். அன்பென்பதும், ஞானமென்பதும் அதிசூக்குமப் பொருள்களானபடியினால், இந்தத் திருமணத்தை அதிசூக்கும பாடையில் தவிரச் சொல்லிக் காட்ட முடியாது. மானிட பாடையில் அவைகளைப் புதை பொருளாய் மட்டும் விவரிக்கலாம்.

அருணந்தி சிவாசாரியார், சித்தியாரில் "சத்தனுக்கோர் சத்தியாம்" என்றதால் சிவனுக்கு நாயகன் பாவகமும், சத்திக்கு நாயகி பாவகமும் கூறினர். பின்னர் அவர்,

> "சத்தியுஞ் சிவமுமாய தன்மையின்
> வுலக மெல்லா மொத்
> தொவ்வா வாணும் பெண்ணுமுணர்
> குண குணியுமாகி வைத்தனன்"

என்றனர்.

ஆதலின் சேதன அசேதன பிரபஞ்சத்திலுள்ள பொருள்களெல்லாம் ஆண் தன்மையும் பெண் தன்மையும் பெற்றன. இந்த தத்துவம் பிராணி வர்க்கத்தில் மட்டுமல்லாமல், விருக்ஷ வர்க்கத்திலும் காணலாம். நிறைவற்ற ஆண் பெண் குறிகள் தனிப்பட்ட செடிகள் பேரிலும், சில சமயம் ஒரே செடியின் பேரிலும் கூடப் பார்க்கலாம். கீழ்நோக்கிச் செல்லச் செல்ல, இந்த ஸ்திரீ புருஷ சங்கம நிலைகள் தெளிவாய்த் தோற்றப் படுதலின்மையாம். அவ்வித நிலைகள் தாவர வர்க்கத்திலும் அமைந்திருக்கின்றனவென்பதற்குச் சாடைகள் பலவுள. மனிதனிடத்திலேயே கூடத் துவந்துவங்கள் இருக்கின்றன. மூளைகள், சடரங்கள், சுவாசாசய இதழ்கள், கண்கள், காதுகள், நாசித் துவாரங்கள், கைகள், கால்கள், புக்கங்கள் முதலியனவெல்லாம் அவனிடத்தில் இரட்டையாகவே காணப்படுகின்றன. இந்த இரட்டைப் பொருள்களுக்குள் பரஸ்பர தொழிற்பாடுண்டென்று எளிதிலறிதல் இயலாது. இவைகளின் பயன் நன்மைக்கும், உருவம் உண்மைக்கும் சேர்ந்திருக்கின்றன. அதன் நிமித்தமாகத்தான் மானிட சரீரத்தில் எல்லாப் பாகங்களிலும் வலது இடது பக்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. வலது பக்கம் உண்மை புறப்படும் நன்மைக்கு சம்பந்தப் பட்டது. இடது பக்கம் நன்மையிலிருந்து வரும் உண்மைக்குச் சேர்ந்தது. இம்மாதிரியாக இவைகள் ஒருசேர்க்கை அல்லது புணர்ச்சியைக் காண்பிக்கிறது. அதனால்தான் மனிதனில் மேல்கண்ட இரட்டைப் பொருள்கள் தோன்றின. இத் தத்துவங்களெல்லாம் முதலான சிவம் சத்தியின் சாயலேயாம்.

எல்லா வடிவங்களும் ஆண் தன்மையும் பெண் தன்மையுமாம்படி சிவமும் சத்தியும் மகிழ்ந்து புணர்ந்து நின்ற முறைமையையும், அதாவது சிவமும் சத்தியுமாக இறைவன் இருவேறு வகைப்பட நிற்பன் என்பதற்கு பீடமும் இலிங்கமும் ஆக அமைந்திருத்தலே பிரத்தியட்சமான சான்றாக அதனையும், மகமதியரிட மெக்காவிலிருக்கும் காபா எனும், கோவிலில் கேப்லா எனும் கருங் கல்லின் நிலையையும், கிறிஸ்துவ வேதத்தில் ஆதியாகமம் 28 வது அத்தியாயத்தில் யோகோப் என்பவர் நிறுத்தி வைத்ததாகக் கூறும் கல்லின் கருத்தையும், நோவாவின் பேழைக்கு இறைவின் தன்மையையும் மானிடர் உணர மாட்டார். அவைகளுக்கெல்லாம் குற்றமான தாற்பரியங்களைக் கற்பனைசெய்துகொண்டு மானிடர் செய்த குற்றங்கள் பலவாம். ஆயினும் மேனாட்டு அறிஞர் சுவிடன்பர்க் என்பவர் இத்திருமணத்தை உலகினர் அறிய அடியில் வருமாறு சுருக்கச் சொல்லி விளக்குகின்றார் :—

"இத் திருமணத்தை இருதயமும் சுவாசாசயங்களும் தரும் உவமானத்தால் அறியலாம். ஒன்று அறிவுக்குமானதும், மற்றது ஞானமானதென்கிற பேதமன்றி, ஒன்று மற்றொன்றைப் போல் ஒப்பிடத்தக்கதாயிருக்கிறது. இருதயத்திலிருந்தும் சுவாசாசயங்களிலிருந்தும், இருதயமானது, முதலில் சுவாசாசயங்களை உற்பத்திசெய்து, பின்னிட்டு அவைகளுடன் புணர்கிறது. அது கர்ப்பத்திலிருக்கும் இளசுவின் சுவாசாசயங்களை உண்டாக்குகிறது. இளசும் பிறந்த உடன் இரண்டும் ஒருப்படுகின்றன. அவைகளின் திருமண மண்டபம், சரீரத்திலுள்ள மற்றப் பொருள்களிலிருந்து விதானம் (Diaphragm) எனும் தடுப்புச் சுவரால் வேறுக்கப் படுகிற இடமாகிய நெஞ்சறை எனும் (Thorax) அதின் உறைவிடத்தில் இதை இருதயமானது நடத்துகிறது. இம்மாதிரிதான் அன்பு ஞானத்துடன்புணருகிறது."

இவைகளை அறிந்துகொள்ள, அங்காதிபாத சாஸ்திரமும் (Anatomy) பிராணிவர்க்க குண சாஸ்திரமும் (Physialogy) ஒருவர் தெரிந்திருக்க வேண்டும். மேலும் நமக்கு உலகத்தில் நடக்கும் விவாகம் மட்டும் தெரியும். அதிசூக்கும, சூக்கும உலகத்து விவாகங்களைப் பற்றி ஒன்றும் தெரியாது. பூலோகத்து விவாகங்கள், குழந்தைகள் பிறப்பிக்கும் பொருட்டாயது. சூக்கும உலகத்தில் அவ்வண்ணமல்ல. சூக்கும உலகத்தில் பிள்ளைகள் தோன்றுவித்தற்கன்றி, நன்மையையும் உண்மையையும் பரப்புவதற்காம். சூக்கும விவாகங்களில் சரீர சம்பந்தமின்று. அங்கே விவாகமான இருவர்களுக்கு நாயகன் நாயகி எனப் பெயரில்லை. ஆனால் ஒன்றுக்கும் இரண்டுக்கும் பொதுவான பரஸ்பர திருநாமமுண்டு. அர்த்த நாரீசுவர வடிவமே அதன் சான்றாம். இவைகளை விரிக்கில் பெருகும். ஆதலின் இதன் விவரங்களெல்லாம் பரக்க அறிய வேண்டுமெனின், நமது பரம இச்சாஞான தீபிகை எனும் நூலைப் பார்க்கக்கடவீர்.

(தொடரும்)



## மாமிச உணவை ஏன் நீக்க வேண்டும்?

[சென்னைப் புலால் மறுத்தல் சங்கம்]

விடை

புலால் உணவு நமது இளைய சகோதரர்களாகிய ஆடு கோழி முதலிய ஜீவன்களின் கொலைக்கும் துக்கத்துக்கும் காரணமாகிறது. பிறர்க்குத் துன்பம் விளைப்பவர்கள் முடிவில் தாங்களும் துன்பத்தைப் பெறுவார்கள்.

உயிர்போன உடல் பிணமானதால் மாமிசத்தில் துர்நாற்றம் நிகழ்கிறது; அசுத்தமும் நிரம்புகிறது.

வியாதியுள்ள மிருகங்களின் மாமிசத்தைப் பார்வையால் மட்டும் கண்டு பிடிக்க முடியாததால் அதைத் தெரியாமல் வாங்கி உட்கொள்ள வேண்டியிருக்கிறது.

நல்ல மிருகங்களின் மாமிசம், கட "[illegible]" முதலிய நஞ்சை அடக்கிக் கொண்டிருப்பதால் வியாதிக்குக் காரணமாகிறதென்று மேல் நாட்டு சாஸ்திரிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

நல்ல மரக்கறி பதார்த்தங்களும் பருப்பு நிலக்கடலை முதலிய தேகபுஷ்டியைக் கொடுக்கக்கூடிய உணவு திரவியங்களும் நம் நாட்டில் ஏராளமாயிருப்பதால் நாம் மாமிச உணவை முற்றிலும் ஒழிக்கலாம். அதற்காக மனப்பூர்வமான பிரயத்தனம் செய்தால் அது கைகூடும்.

குதிரை, யானை முதலிய பிராணிகள் மரக்கறி உணவை மாத்திரம் உட்கொண்டு, எவ்வளவு தேகவன்மையுடைத்திருக்கின்றன. நாம் அவை

"கிடப்பது ஏனோ?" எனிற் கூறுதும். சமயங்கள் பல் வேறாகக் காணப்படினும், ஒன்றுடனொன்று முரண்படுவதாகக் காணினும் அவையிற்றின் இலக்கு ஒன்றே யன்றோ? ஊனை நாடக மாட்டுவிக்கும் ஒப்புயர்வற்ற பரம் பொருளின் இணையடி சேர்தலே அவ்விலக்கன்றோ? அற்றாயின் அவ்வொரு உயர் நோக்கத்துடன் எத்துணைச் சமயங்கள் எழுந்தாலென்? விழுந்தாலென்? ஆனால் எழுந்த காலத்து ஒன்றுடனொன்று முரணி மலைகின்றனவே யெனின் அத்தகைய சமயச் சழக்கு உண்மை யுணரா மாக்கள் தம் மடமையிற் பிறந்ததேயாம்.

"ஒன்றது பேரூர் வழியா றதற்குள
வென்றது போல விருமுச் சமயமும்
நன்றிது தீதிது வென்றுரை யாளர்கள்
குன்று குரைத்தெழு நாயை யொத்தார்களே"

என மூல முனிவர் முறுகி மொழிந்ததனுமிதை யுணர்க. நாடுகள் எத்துணை எத்துணையோ, மக்களும் அத்துணை அத்துணை வேறுபாடுடையர். எனவே அவ்வவர்தம் அறிவாற்றலுக்கும் உணர்ச்சித் திறனுக்கு மேற்றவாறு ஒரு கடவுளர் மாட்டோ அன்றிப் பல கடவுளர் மாட்டோ கொண்ட தொடர்பின் கொள்கைகள் அவ்வக் காலத்திற் கேற்றவாறு உடன் வளர்ந்தும் திரிந்தும் புதுப்புதுச் சமயங்களாக நிலைத்து நிலவுவனவாகும். அவ்வாறின்றி, எழுந்த ஒரு சமயம் இடையீடுபட்டு அழிவுற நேர்ந்த விடத்து அடியோடு அழிந்தே போயிற்றென்றோ, அழிவுற்ற வந்நாண் முதல் அச்சமயத்துக் குடைய மக்கட் பகுப்பினர் வேறு எவ்விதச் சமயக் கொள்கைகளுமின்றியே இருந்தாரெனவோ யாம் கண்டோமில்லை. கற்றோன்றி மட்டோன்றாக் கால முதல் இருந்து வந்த மக்களில் எவ்வகுப்பினரேனும் எவ்வொரு சமயக் கோட்பாடு மின்றி எப்பொழுதேனும் இருந்து வந்துளரா எனத் துருவித் துருவிப் பார்க்கினும் அறிவுபடைத்த எம்மக்கட் டொகுதியும் சமயமென்ற உயிர் நிலையின்றி அவ்வாறு வாழ்ந்து வந்ததாகக் கூறுவதற் கில்லை; அதனால் இனி எக்காலத்திலேனும் வாழக் கூடுமென்று கூறுவதற்கு மில்லை. உயிரின்றிலதும் உடம்பெனின், சமயமின்றிலதும் சமூகம்.

அற்றேல் உயிர்க்குறுதி பயக்கும் உண்மை யிலக்கணங் கெட்டுச் சமயம் மங்கி மறைந்து நிற்குங் காலம் ஒரு சிறிதேனு மிருந்ததில்லையோ வெனில் இருந்த துண்டு. அத்தகையதோர் இடைக்காலம் (இடர்க்கால மெனினு மொக்கும்) ஒவ்வொரு சமயத்திற்கும் ஒரு முறையே யன்றிப் பலமுறைகள் இருந்த துண்டு. இனியும் இருக்கப் போவது முண்டு. ஒரு சமயத்தின் அடிப்படையான கொள்கைகள் புலனாகாவாறு பொருளற்ற சடங்குகளும் மூடப்பழக்க வழக்கங்களும் புனன் மண்டுவதெனப் பெருகிச் சமய இலக்கை விலக்கி நிற்குங் காலமே இடைக்கால மெனப்படும்; அதுவே அச்சமயத்தை மேற்கொண்டோர்க்கு இடர்க்காலமு மாகும். ஆயினும் அத்தகைய இடைக்காலங்கள் நீண்ட நாளிருப்பதில்லை. உலகின்கண்ணுள்ள உயிர்த் தொகுதிகளி யாவற்றையும் போன்று சமயமும் இடையறாது தோன்றி வளர்ந்து அழியும் நீர்மையதாகலின் ஒடுங்கிய விடத்திருந்து மீண்டும் புத்துயிர் கொண்டு முன்னினும் சிறந்த கொள்கை வலியுடனும் பொருட் செறிவுடனும் அது தோற்றமுறுவதியல்பு. என்னை? மலை முகட்டின் மீது தட்டுத் தடுமாறி ஏறியானொருவன் அதன் பின் கீழே இறங்காதென் செய்வான்? கீழ் இறங்கிய பின்னன்றோ மறுமுறை ஏறுவதென்பது எளிதாகும்? அவ்வாறு மறுமுறை ஏறுங்கால் முன்னினும் விரைவாகவும் உறுதியாகவும் ஏறலாமே யொழிய, முகட்டையடைந்த பின் அதன் மேலும் ஏறுவதென்பது முடியுமோ? அவ்வாறே ஒரு சமயம் ஒரு காலத்தில் திறம்படத் தோன்றிச் செழித்து வளர்ந்து உச்சநிலை யெய்தியபின் சிறிது காலமேனும் இறக்க முறுதல் திண்ண மன்றோ? அக்காலத்தில் கொண்ட கொள்கைகள் குறைவாகக் கருதப் படும். சமயச் சிறப்புக் குறைவுறும்; சமயா சாரியர்களும் தூற்றப் படுவர், ஆனால் அவ்வாறு குறைவுபட்ட ஒரு சமயம் உடனே விரைவில் புத்துயிர் பெற்றுத் திருந்திய சீருடன் தோன்றுங் காலத்தில் பன்மடங்கு அதிக வாற்றலுடனும் ஒப்ப முடிந்த உயர் கொள்கைகளுடனும் தோன்றி மிளிர்வது கண்கூடாகக் காணப்படுவதோர் உண்மை யாகும். இடையே புகுந்த பௌத்த சமணக் கொள்கைகளின் தாக்குதலினால் பாண்டிய மன்னர் காலத்து எஞ்சைவ சமயம் ஒரு சிறிது தளர்வுற்றுத் தட்டழிந்து நிற்கவில்லையோ? பூழியர் கோன் வெப்பொழித்த புகலியர் கோன் அவதரித்து வேத நெறி தழைத்தோங்கவும் சைவத் துறை விளங்கி யோங்கவும் அருஞ்செயல்பல புரிந்த பின்னரன்றோ அது புத்துயிர் பெற்றுப் புறப்பட்டது. புத்துயிர் பெற்ற காலை புதிய ஆற்றலுடன் தோன்றுமென யாம் மேலே கூறியதை விளக்கவன்றோ எங்குல மணி விளக்கான சேக்கிழார் பெருமான் "மிகு சைவத்துறை விளங்க" என்று மிகு என்னும் அடை கொடுத்துக் கூறினர். இனிச் சைவமே போன்று வைஷ்ணவத்திற்கும் அந்நாள் எய்திய இடைக்கால மொன்றுமுண்டு. அது நம்மாழ்வாரது போராற்றலினால் விலக்கப்படவே அச்சமயம் பின் சிறப்பெய்த வில்லையோ? சிறித்து மதமும், யூதமதமும் இவ்விடைக்கால இருஞ் சுழலிற்குத் தப்பியதுண்டோ? இல்லையாகலின் ஒவ்வொரு சமயமும் வீறு பெற்றோங்கி வளர்ந்து காலாந்தரங்களில் பெருமை குறைந்து தட்டழிந்து நிற்கும் இயல்புடையதென்றும் அது காரணமாகவே பின்னர் அதுபுத்துயிர் கொண்டு பிறங்குங் காலத்து முன்னினுஞ் சிறந்து தோன்றி வளருமியல் புடையதென்பதும் பெறப்படும். இதுவே சமய வளர்ச்சி நெறி போலும்! இதுவே சமயத்தின் உயிர்ப் பண்பு போலும்!



## "பண்மயத்த மொழிப்பரவை"

[வல்லை - பாலசுப்பிரமணியன்]

"மாசறு பொன்னே! வலம்புரி முத்தே
காசறு விரையே! கரும்பே! தேனே!
அரும்பெறல் பாவாய்! ஆருயிர் மருந்தே!
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே!
தாழிருங் கூந்தல் தையால்! நின்னை
மலையிடைப் பிறவா மணியே என்கோ
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ,
யாழிடைப் பிறவா இசையே என்கோ"

—சிலப்பதிகாரம்.

தென்றமிழ் நாட்டின்கண் மிகப் பழமையானதும், சைவ நூற்களிலும் புராணங்களிலும் பெரிதும் பாராட்டப் படுவதும், சைவ சமயாசாரியர் நால்வரில் முதன் மூவரால் பாடப்பெற்றதும், அகன்ற மதில்களாற் சூழப்பட்டு, வானுற வோங்கி நிமிர்ந்திருக்கும் பெரிய சிவாலயத்தைத் தன்னகத்தே

களைப் போலில்லாமல் கொடுமை வாய்ந்த புலி கரடிகளுக் கொப்ப வாழ்வது நியாய மல்ல.

புலால் உணவு கோபம் முதலிய கொடிய குணங்களுக்கு அநுகூலமான தாகையால் இந்திரியங்களையும் மனத்தையும் அடக்கிச் சன்மார்க்க நெறியில் செல்ல முயல்பவர்களுக்கு அது தடையாகும்.

அன்பும் சன்மார்க்க நெறியும் நம்மைக் கடவுளிடம் சேர்க்குமே யல்லாது மத நம்பிக்கையும் வெளி வேஷ சின்னங்களும் பயன் தாராவாகையால் அன்புக்கு முரணான உணவை நாம் உட்கொண்டு உயிர் வாழ்வது கடவுள் வழிபாட்டுக்கு விரோதம்.

தேக ஆரோக்கியத்துக் காகவும் அறிவு, அன்பு, கடமைகளைச் செய்ய ஆற்றல் இவைகளைப் பெறவும் நாம் உணவு சாப்பிட வேண்டுமே யல்லாது நாக்கின் சுவைக்காகவும் மதோன்மத்தராய்த் திரிவதற்காகவும் நாம் உணவு கொள்வது சரி யல்ல.

சூரிய ஒளியிலுள்ள ஜீவிய சக்தி மரக்கறி உணவில்தான் நிரம்ப அடங்கியிருக்கிறது. தேக உறுதிக்கும் ஆயுள் வளர்ச்சிக்கும் அது அநுகூலமாகிறது.

கள் குடிவெறிக்கும் லாகிரி வஸ்துக்களிடத்திலுள்ள ஆசைக்கும் மாமிச உணவு ஒரு காரணமாதலால் அறிவுள்ள மனிதர்கள் இந்த உணவைத் தள்ளிவிட வேண்டும்.

விகாச முறையில் கடவுள் படிகளை ஏற்படுத்தி யிருக்கிறார். மிருகங்களுக்கு மானிட வர்க்கம் அடுத்த மேற்படி. அந்தப் படிக்குச் செல்ல நாம் அவைகளுக்கு அன்பு காட்டி உதவி செய்தால் தான் நம்மை அறிவுள்ள மக்களாகக் கடவுள் கொள்ளுவார்.

ஆடு மாடு முதலிய ஜீவன்களை விட மரம் செடிகளுக் குச் சுகதுக்க நுகர்ச்சி குறைவு. இவைகளையும் முற்றிலும் வெட்டாமலே அளவற்ற பலனை நாம் கொள்ளலாமே.

மனிதனுடைய பற்கள், ஜீரண உறுப்புக்கள் முதலியன இயற்கையில் மரக்கறி உணவைக் கொள்வதற்குத் தக்கவாறு அமைக்கப்பட் டிருக்கின்றன.

நெடுநாள் பழக்கமான மாமிச உணவை விட்டு விட்டால் வியாதி வரும் என்று பலர் அஞ்சுகின்றனர். புலால் உண்ணுதலை விட இஷ்டமிருந்தும் இவ்வச்சத்தால் முடியவில்லையே என்கிறார்கள். நீண்டநாள் பழக்கமான ஒன்றைத் திடீரென்று முற்றிலும் விட்டால் ஒருகால் சற்று வியாதி பீடித்தாலும் பீடிக்கலாம். கொஞ்சங் கொஞ்சமாய்க் குறைத்து வந்து ஒரு வருஷத்துக்குள் முற்றிலும் தள்ளிவிடலாம். மனோதிடம் அதிக மிருப்பின் அவ்வளவு தாமத மாகாது.

நம்மைப் படைத்த அன்பு மயமான கடவுள், பின்வரும் வாக்கியங்களை அவன் பணியாளர்கள் மூலமாய் அளித்திருக்கிறார். அவ்வருள் வார்த்தைகளை அலட்சியம் செய்து நடந்தால் நம்மை ஆஸ்திகர்களாக அக்கடவுள் கொள்ளத் தகுமா?

(i) கொல்லா விரதம் குவலயம் எல்லாம் ஓங்க
எல்லார்க்கும் சொல்லுவதென் னிச்சை பராபரமே—தாயுமானவர்.

(ii) கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும்—திருவள்ளுவர்.



(iii) புன்புலா லுடம்பி னசுத்தமு மிதனிற்
புகுந்து நானிருக்கின்ற புணர்ப்பும்
என்பொலா மணியே யெண்ணிநா னெண்ணி
யேங்கிய வேக்க நீ யறிவாய்
வன்புலா லுண்ணு மனிதரைக் கண்டு
மயங்கி யுண்ணடுங்கி யாற்றாமல்
என்பெலாங் கருக விளைத்தன னந்த
விளைப்பையு மைய நீ யறிவாய்.

—இராமலிங்க சுவாமிகள்

ஐரோப்பா, அமெரிக்கா முதலிய நாடுகளில் புலால் மறுத்தல் சங்கங்கள் அநேக வருடங்களாகப் பிரசாரம் செய்ததின் பயனாகவும், மருத்துவர்களும் சாஸ்திரிகளும் செய்த ஆராய்ச்சியினால் கண்ட உண்மைகள் பரவிக்கொண்டிருப்பதாலும் ஆங்கு நாளுக்கு நாள் அநேகர் மாமிச உணவை விலக்கிக் கொண்டு வருகிறார்கள்.

---

# சமய உணர்வும் ஆராய்ச்சி யறிவும்

[காழி. சிவ. கண்ணுசாமி, B. A.]

"சமயத்தின் உண்மை இலக்கணம் யாதாயின் எமக்கென்? அறிவு திருத்த முறாது அருகியிருந்த பண்டைக் காலத்தே கடவுள் என்றும் கடவுளரென்றும் அவர் பற்றி யெழுந்த மாறுபடு சமயங்கள் என்றும் இவை யெல்லாம் வேண்டுவனவே. தெள்ளிய ஆராய்ச்சி யறிவு பரந்து விளங்கும் இக்காலை அவை யெல்லாம் எற்றுக்கு? ஐம்பெரும் பூதங்களின் சேர்க்கையாலாகிய இவ்வுலகம் கடவுள் என்ற அவற்றின் வேறாய பொருள் ஒன்றின்றியே தானாகவே திரிந்தும் அழிந்தும் காரியப்படும். ஆகவே கடவுள் என்ற ஒரு மிகைப் பொருளைக் கொண்டு அவர்க்கென ஒரு சமயமும் படைத்துக் கொண்டு அல்லலுற வேண்டாம். அக்கடவுளும் சமயமு மின்றியே இனி எம் வாழ்வு நடைபெறும்" என ஆராய்ச்சியாளர் கூறுவர். இக்கூற்று, இதயம் இதுகாறும் இடப் புறத்திலேயே தான் அமைந்திருந்தது என்பது உண்மையே யானாலும் அது இடப் புறத்திலேயே தான் அமைந்திருக்க வேண்டுமென்றதோர் நியதி யில்லை; அதை வலப் புறத்தில் வேண்டுமானாலும் மாற்றி யமைத்துக்கொள்ளலாம், அன்றி அதை அப்புற மகற்றி விட்டு மிருக்கலாம் எனக் கூறுவாரது புன் மொழியையே யொக்கும். என்னை? இதயமே மனித உடம்பின் உயிர் நிலை. அவ்விதயமாகிய உயிர்நிலை யின்றி உடம்பு காரியப்படுவ தில்லை; அஃதே போல் சமயமே மக்கட் டொகுதியாகிய தொகுப்புடம்பின் உயிர்நிலை. அஃதின்றேல் மக்கட்டொகுதி இவ்வுலகில் நல்வழிப்பட் டொழுகுமா றில்லை. எனவே உயிர் நிலையனைய சமய உணர்வு மிகையாமெனக் கூறுதல் பேதைமை யன்றோ? சமய,

"உணர் வுடையார்கட் குலகமுந் தோன்று
முணர் வுடையார்கட் குறுதுய ரில்லை
யுணர் வுடையார்க ளுணர்ந்த வக்கால
முணர் வுடையார்க ளுணர்ந்து கண்டாரே"

எனப் பெரியார் எடுத்துக் கூறியதினாலும் இது நன்கு விளங்காதோ?

"சமயம் மக்கட்டொகுதியின் உயிர் நிலை என்பதொக்கும் எனினும் உடம்பிற்குயிர் நிலையொன்றேயாக அமைந்து கிடப்பது போல் இச்சமயமும் ஒன்றேயாயமையாது பல் வேறாகப் பல்கிக்

கொண்டுள்ளதுமான நகரம் திருவாரூர் ஆகும். இத்தகைய தொன்மை மிக்க நாட்டில் கி. பி. ஏழாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் சிவாலயத் திருப்பணி ஒன்றனையே தமக்கு உய்யு நெறியாகவும், செல்வன் கழலேத்துஞ் செல்வத்தையே பெருஞ் செல்வமாகவுங் கொண்டுள்ள உருத்திர கணிகையர் மரபில், அரிய பெண்மகவு ஒன்று பிறந்தது. ஒரு குலத்துக்கொரு மகளாய் பிறந்த இக்குழவியை அதன் பெற்றோர்கள் கிடைத்தற்கரிய செல்வமாகப் பாராட்டி, ஒரு நன்னாளில் அம்மகவிற்குப் பரவையார் என்று பெயரிட்டனர். பரவையாரும், ஒரு குறைவுமின்றி, பெண்களுக்குரிய பல கலைப்பயிற்சியும் எளிதில் எய்தப்பெற்று, விழுப்பந் தரும் நல்லொழுக்கங் கடைப்பிடித்து, ஒவ்வொரு பருவமுங் கடந்து, இறுதியில் அழகு மிக்க மங்கைப் பருவம் அடைந்தார்கள். பெண்கள் மங்கைப் பருவம் அடைந்தவுடன், இஞ்ஞான்று பெற்றோர்கள் அவர்களை இட்செறித்து, அவர்களது உரிமையையும், மகிழ்ச்சியையும் குலைத்து வருவது போன்ற தீய வழக்கம் அக்காலத்திருந்ததாகத் தெரிய வில்லை. ஆகவே, பரவையாரும், நாடோறும் விண்மீன் புடைசூழ்ந்து வரும் உவாமதிபோன்று, தம்சேடியர் மருங்கு புடைபெயர, திருவாரூரிலுள்ள சிவபெருமானை மெய் மொழி மனங்களால் வழிபட்டு வருவாராயினர்.

இஃதிங்ஙன மிருக்க ஏறக்குறைய அதே காலத்தில் தென்னாட்டின் மற்றொரு சார்பில் பலவளங்களும் சிறந்த திருமுனைப்பாடி நாட்டில் திரு நாவலூர் என்னும் நகரத்தில் ஆதி சைவ அந்தணர் குலத்தில் தோன்றிய சடையனார் என்பாருக்கும், அவர்தம் மனைவியார் இசை ஞானியாருக்கும் ஓர் அரிய ஆண்மகவு தோன்றி நம்பியாரூரர்என்று பெயரிடப்பட்டது. இக்குழவி கருவிலேயே திருவுடையதாதலால், மிக்க விரைவில் முறுகி வளர்ந்து பலகலைகளையும் ஆய்ந்து முழு எழிலோடும் விளங்கியது. "மகனறிவு தந்தையறிவு" என்னும் ஆன்றோர் மொழி உண்மை யன்றே. ஆகவே, நமது நம்பியாரூரரும் சிவபக்தியிற் சிறந்து, நல்லாரிணக்கம் பெற்று, நாடோறும் திருக் கோயில் வழிபாடு செய்து வருவாராயினர். பற்றற்றான் பற்றினைத் தவிர, அவருக்கு மற்றுப் பற்றே கிடையாது. ஐந்தெழுத்தாலாகிய திருமந்திரத்தை அவர் மறந்தாலும் அவர் நா இடையறாது சொல்லிக்கொண்டே யிருக்கும். தீநெறிகளில் வழுக்கி வீழ்ந்தாலும், சிவபெருமானுடைய திருப்பெயரைத் தவிர மற்றொன்று அறியமாட்டார். இவர் இயற்கையிலேயே மிக்க அழகுடைய ராதலானும், தம்மை அலங்கரித்துக் கொள்வதில் கண்ணுங் கருத்துமுடையவராதலினாலும் அக்காலத்திருந்தோர் இவருக்குச் "சுந்தரர்" என்று காரணப் பெயரிட்டழைத்தார்கள். சுந்தரமூர்த்திகள் பற்பல சிவஸ்தலங்களை யெல்லாம் வணங்கிக் கொண்டு, இறுதியில் பரவையார் வளர்ந்து வரும் திருவாரூருக்கு வந்தார்.

வந்தவர், வழக்கம் போல் ஒரு பகல் திருவாரூரிலுள்ள சிவ பரம் பொருளைக் கண்டு வணங்கும் பொருட்டுக் கோயிலுக்குச் சென்று ஐந்து பேரறிவுங் கண்களே கொள்ள முழு முதற் கடவுளைக்



கண்டு மெய்ம் மறந்து நின்றார். அவ்வமயத்திலே,

" ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான் முந்துறும் "

என்னும் பொய்யா மொழிப்படி என்றும் வருவது போல அன்றும் பரவையாரும் தோழிகள் தம்மைச் சூழ்ந்து வரச் சுந்தரருக்கு எதிராக வந்து சிவபெருமான் திருமுன் நின்று வணங்கினார். உடனே, பண்டை வினைகள் பயன் கூட்ட, தெய்விகக் காதல் வலிந்தெழுப்ப, காந்தத்தைக்கண்ட ஊசி ஓடி யதனையடைவதுபோல், இருவர் உள்ளங்களும் பொங்கி யெழுந்து கண்களின் ஆறுக ஒருவர் உள்ளத்திலிருந்த ஆசை வெள்ளம் மற்றொருவர் உள்ளத்தில் வடிந்துப் பாய்ந்து ஒன்றாய்க் கலந்தன. எல்லாம் முடிந்து விட்டது. இனி வாய்ப் பேச்சு எற்றுக்கு? இருவருக்கும் ஆசை என்னும் வெள்ளம் பொங்கி நாண் என்னும் கரையை அழித்து, வாய்களின் வழியாகக்கிழ் வருமாறு பெருக்கெடுத்து ஓடிற்று. பரவையாரைப் புறங்கண்ட சுந்தரர்,

" கற்பகத்தின் பூங்கொம்போ!
காமன்தன் பெருவாழ்வோ!
பொற்புடைய புண்ணியத்தின்
புண்ணியமோ! புயல் சுமந்து
விற்குவளை பவள மலர்
மதிபூத்த விரைக்கொடியோ!
அற்புதமோ! சிவன் அருளோ!
அறியேன் "

என்று அதிசயித்தார்.

இன்னும்,

" ஓவிய நான்முகன் எழுத
ஒண்ணுமை உள்ளத்தால்
மேவியதன் வருத்தம் உற
...
விதித்ததொரு மணிவிளக்கோ!
மூவுலகின் பயன் ஆகி
முன் நின்றது "

எனவும் பற்பலவாறு நினைந்தார். அது போன்றே சுந்தரரைப் புறங்கண்ட பரவையாரும்,

" முன்னேவந் தெதிர் தோன்றும்
முருகனோ? பெருகொளியால்
தன்னேரில் மாரனோ?
தார்மார்பின் விஞ்சை யனோ?
மின்னேர் செஞ்சடை யண்ணல்
மெய் அருள் பெற்றுடையவனோ?
என்னே! என் மனம் திரித்த
இவன் யாரோ? "

என நினைந்தார்.

கண்டு இவ்விருகாதலரையும் பிணைத்தது வெறுங் காம உணர்ச்சி யன்று; இஞ்ஞான்றைய சிறுவர், சிறுமியர் நஞ்சினை யூட்டும் நாவல்களைப் படித்தும், நாடகங்களையும், சினிமாப் படங்களையும் பார்த்தும் இவைகளா லெழுப்பப்பட்ட உணர்ச்சியினால், ஒருவரையொருவர் நோக்குங்கால், ஒத்த குணங் குறிகளை ஓராது, வெறும் புறவனப்பினையே கண்டு, வேட்கை கொள்ளும் " கண்டவுடன் கொள்ளுங் காதலும்" (Love at first sight) அன்று. மற்றென்னையோ வெனின், நல்லொழுக்கம், சிவ வழிபாடு என்னும் இவை யிரண்டுமே நடு நின்று இவ்விருவரையும் பிணைத்தன. அன்பர்களே! பாரீர். சுந்தரர் பரவையாரைப் பற்பலவாறு புகழ்ந்து இறுதியாகச் "சிவன் அருளோ"? என்று கூறியதும், பரவையார் சுந்தரரை " முருகனோ, மாரனோ, விஞ்சையனோ " என்று கூறி, கடைசியில் "மின்னேர் செஞ்சடையண்ணல் மெய்யருள் பெற்றுடையவனோ " என்று சொல்லியதும் நோக்குங்கால் இவ்விருவரையும் உள்ளங் [illegible]

187126

விழுப்பொருள் எதுவென்று நீவிர் உய்த்துணர்ந்து கொள்வீர்கள். ஆகவே இனி, ஒன்று பொருந்தப் பெற்றாலன்றி, தனியே உயிர் வாழமுடியாதென்று நிச்சயித்து விட்டார்கள். நெடுநாள் தன்னோடுடன் இருந்து, ஒருநாள் சரேலெனத் தன்னை விட்டுப் பிரிந்த ஆவியைத் தேடித் தேடி அலமருகின்ற உடம்பைப்போல் இருவரும் ஆனார்கள். பரவையாரைச் சிவபெருமான், தான் உய்யும் வகை அறிந்து அளித்த அருள் என்றே நினைத்த நமது நாயனார்,

“ பாசமாம் வினைப் பற்றறுப்பான் மிகும்
ஆசைமேலும் ஓர்ஆசை அளிப்பதோர்
தேசின் மன்னி என்சிந்தை மயக்கிய
ஈசனார் அருள் எந்நெறிச் சென்றதே.

“ உம்பர் நாயகர் தம்கழல் அல்லது
நம்பு மாறறி யேனை நடுக்குற
வம்புமால் செய்து வல்லியின் ஒல்கிஇன்று
எம்பிரான் அருள் எந்நெறிச் சென்றதே.

“ பந்தம் வீடு தரும்பர மன்கழல்
சிந்தை ஆரவும் உன்னும் என்சிந்தையை
வந்துமால் செய்துமான் எனவே விழித்து
எந்தையார் அருள் எந்நெறிச் சென்
[றதே.

என்று எங்குங் காணாராய்த் தேடித் தேடி யலைந்தார். சுந்தரர் பரவையாரைப் பற்றி “ என் மனங் கொண்ட மயிலியலின் இன்தொண்டைச் செங்கனிவாய் இளங்கொடிதான் யார் ?” என்று கேட்க, அருகிருந்தோர், “ அவர் நங்கை பரவையார் ” என்று விடையிறுத்தார்கள். அது போன்ற பரவையாரும் சுந்தரரைப் பற்றித் தன் சேடியொருத்தியை “ ஆரூர் ஆண்ட மைவிரவு கண்டரை நாம் வணங்கப் போம் மறுகெதிர் வந்தவர் யார் ?” என்று வினவ, அவள் “இவ்வுலகில் அருந்தனாராய் இருவர் தேட ஒருவர்தாம் எதிர் நின்றாண்ட சைவமுதல் திருத்தொண்டர் தம்பிரான் தோழனார் நம்பி” என்று பதிலிறுத்தாள். இதனைக் கேட்ட பரவையார் இறும்பூதெய்தி “ எம்பிரான் தமரேயோ ” என்று கூறி மனங்குழைந்தார்.

இவர்களது முறுகி வளர்ந்த காதல் உணர்ச்சியினைக் கண்ட இருவரது பெற்றோர்களும், மற்றுமுள்ள பெரியோர்களும் ஒரு நாளில் இருவருக்கும் மணம் முடித்தனர்.

இனி, நவில் தொறும் நயந் தோன்றும் பெரிய புராணத்திற்கு முதனூலாகிய திருத்தொண்டத் தொகையைப் பாடியவரும், சைவ சமயகுரவர் நால்வருள் ஒருவரும், தமிழ் மறையாகிய தேவாரத்தின் ஒரு பகுதியின் ஆசிரியருமாகிய சுந்தர மூர்த்தி நாயனாரது மணவாழ்வினின்றும், உலகவாழ்வில் ஈடுபட்ட எம்போன்ற சாமானிய மக்கள் அறிந்து கொள்ள வேண்டிய நீதிகள் சிலவற்றை எம்மறிவிற்கு பட்டவரையில் எடுத்துக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். அப்பெருமானது சமய வாழ்வைப் பற்றியும் பக்தி நெறியின் தத்துவங்களைப் பற்றியும் எழுதப் புக எமக்கு எட்டுணையும் ஆற்றல் இல்லை. இவைகளையெல்லாம் விளக்கி உலகிற்குப் புகட்டுவது சைவப் பெரு மக்களது கடன். இது நிற்க.

முதற்கண் நம்பியாரூரர் மண வாழ்விற் சுகவாழ்வடையும் மர்மத்தினை நன்றாயறிந்து கொண்டிருந்தார். “இன்பமுண்டேல் துன்பமுண்டு ஏழைமனை வாழ்க்கை” என்னும் தம் அருமை வாக்கால், துன்பக் கலப்பில்லாத இன்பம் யாண்டும் பெறமுடியாதென்றும், “ எற்குத் துன்பம் வேண்டா ; இன்பமே வேண்டும் ” என்று அலையும் மக்கள் சேய்மையிற் புலனாகும் பேய்த்தேரினை நீர்த்திரளென்று பிறழ நினைத்து அதன் பின்னோடும் நீர்வேட்கையுற்றோனுக்கு ஒப்பாவார்களென்று, தமது வாழ்வையும் இயைபு படுத்தி, நமக்கு அங்கை நெல்லிக் கனியென விளக்கிக் காட்டுகிறார். இக்கருத்தைத் தம் திருவுள்ளத்திலிருத்தியே தெய்வப் புலவரும்,

“ நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவ தெவன் ” [கால்

என்று நம்மை நோக்கிக் கலகலவென்று நகைக்கின்றார்.

இனி, ஓர் ஆடவன் மனைவாழ்க்கையை நடத்துங்கால் அவனுக்கின்றியமையாத உறுதுணையாயிருப்பவள் அவனுடைய மகவி யன்றே? அவளிடத்தில் இவன் எவ்வாறு நடந்து கொள்ளுதல் வேண்டும் ? அவள் வேறுபட்டிருந்தால் இல்வாழ்க்கை இயங்குங்கொல் ? இதில், வன்றொண்டர் நமக்கு எவ்வாறு வழி காட்டுகிறார் ?

“பன்மாயக் கள்வன் பணிமொழி யன்றோ
பெண்மை உடைக்கும் படை.” [நம்

என்னும் பொய்யாமொழியின் பொருளை அவர் நன்குணர்ந்திருந்தார். தாம் காதலித்து அரிதிற் பெற்ற பரவையாரை வாயாரப் புகழ்வதில் சற்றும் பின் வாங்கினாரில்லை. “பண்மயத்த மொழிப் பரவை” என்றும், “ மாழையொண் கண் பரவை ” என்றும் தோத்திரஞ் செய்தல் காண்க. பரவையார் மகிழ்ச்சிக்காக சுந்தரர் எதுவுஞ் செய்வார். செய்துகொண்ட சூளுரையையும் மீறுவார் ; கண்ணவிந்து தவிப்பார் ; கேட்கக் கூடாதவர்களையும் இறைஞ்சிப் பரவையாரிடத்து வாயில் வேண்டுவார். ஏயர்கோன் கலிக்காமர், விறன் மிண்டர் முதலிய பெருமக்களது பகைமையையும் பாராட்ட மாட்டார்.

ஒரு புகழ் மொழியினால் பெண்கள் எவ்வளவோ மகிழ்ச்சி அடைவார்கள். அஃது அனுபவசாலிகட்கே தெரியும். வெறுங் கையாலும் முழமளக்கலாமல்லவா ? அதுபோன்றே மனைவிமார்கள் குரூபிகளாயிருந்தாலும், அவர்களை இரதி தேவியின் உருவங்களாகவும் தங்களைக் காமவேளின் அவதாரங்களாகவும் நினைத்துக்கொள்ள வேண்டும். உண்மையாகவே அத்தகையோர் இரதி மன்மத சுகத்தையே பெறுவர். அன்பர்களே ! ஒரு நாளெல்லாம் ஓர் இன்சொல்லிற்காவது பெண்கள் உம்மிடத்து ஏக்கற்று நிற்கின்றார்கள். தாம் அன்பைக் குழைத்து அட்ட அடிசில் “ தீஞ்சுவை பயக்கின்றது ” என்று சொல்வீர்களா என்று உமது முகத்தை ஆர்வமுடன் நோக்குகின்றார்கள். நீங்கள் நாளெல்லாம் உழைத்து அலுத்துப் போய் வீட்டிற்கு வரும்போது, உமது அயர்வைப் போக்கி அகத்தைக் குளிர்விக்க, நீங்கள் வருவதற்கு முன் பரபரப்புடன் தம்மை அலங்கரித்துக் கொண்டு உம்மை நளிமுகங்காட்டி வரவேற்கின்றார்கள். தம்முடைய எழிலைப் புகழ்வீர்கள் என்று ஆசையுடன் எதிர்பார்க்கிறார்கள். நாம் மூடின வாயைத் திறந்தால், அவர்களது எண்ணமெல்லாம் நிறைவேறும்போது அவ்வளவு எளிதான காரியத்தை ஏன் நாம் செய்தல் கூடாது ? அடிசிலில் சற்று உப்பில்லா விட்டாலும், “இவ்வடிசில் எற்கு நறுஞ்சுவை தருகின்றது ; என்றும் சிறிது உப்பு அதிகமாக இருந்

தால், இது தேவாமிர்தத்தையே ஒக்கும். ஆ! உன்கைத்திறன் எத்துணை நேர்மையானது" என்று சொல்லுதல் வேண்டும். உம்மை மகிழ்விக்கும் பொருட்டு ஒரு புதிய ஆடையை உடுத்தால் "ஆ! இப்புடவை உனக்கென்றே நெய்யப்பட்டது போன்றிருக்கிறது" என்று ஏன் சொல்லுதல் கூடாது? ஆகவே, உமது மனச் சங்கடங்களையெல்லாம், உமது காரியாலயத்திலேயே மூட்டை கட்டி விட்டு வரவேண்டும். தொண தொண வென்று அவைகளை வீட்டிற் சொல்லிக் கொண்டிருத்தல் கூடாது. அவைகள் பெண்களுக்கு மனச்சலிப்பைத் தரும். சுகமடையும் நெறி நமது கால்களில் விழுந்து கிடக்கின்றது. அதை யெடுத்து நாம் கையாள வேண்டும். செய் தீ வினையிருக்க தெய்வத்தை நோதல் என் பயன் விளைத்தற்கு? மனமிருந்தால் தானே வழி பிறக்கும்.

"இறைகளோடு இசைந்த இன்பம்
இன்பத்தோடு இசைந்த வாழ்வு"

என்ற வண்ணம் என்றும் மாறாத இயற்கையோடு இயைந்து வாழும் வாழ்வினையே தமது குறிக் கோளாகக் கொண்ட நமது நாயனார், ஆரூர் இறைவன் தமக்கு அருளிய பரவையாரோடு கூடி இல்வாழ்க்கை நடத்துதற்கு இன்றியமையாதன வற்றைத் தேடுதல் தமது முதற் கடமையாகக் கொண்டார். குண்டையூர்க் கிழாரிடமிருந்து நெற்குவியல்களைப் பெற்றார். அம்மட்டுமா, முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால் முடியுமன்றே? அப்படியிருக்க, இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றினின்ற துணையாயிருந்து, துறந்தார்க்கும், துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும் உதவி செய்து, தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்னும் ஐம்புலத்தாரையும் ஓம்பி, அரசிறையும் நல்கி ஒழுகும் இல்வாழ்க்கைக்குப் பொன்னின் இன்றியமையாமை சொல்லவும் வேண்டுமோ? ஆகவே, நம் சுந்தரர் பொன்னையும் தேடிப் பரவையாருக்குத் தந்தார்.

மற்றும், உலகத்தாருடைய நன்மதிப்பைப் பெறுதற்கும், ஒப்புரவறிந்து வாழ்தற்கும், நோய் நொடிகள் அண்டாமல் காத்துக் கொள்ளுதற்கும், தமக்கும், தம் மனைவி மக்கட்கும் உடுத்தற்கு ஆடைகளும், பூணுதற்கு அணிகலன்களும் தேட வேண்டியது, இல்வாழ்வானது முக்கிய கடமைகளுள் ஒன்றாகும். இக்கடமையைச் செலுத்தினதில் இதுகாறும் நமது நாயனாருக்கு இணையானவர் எவரும் இருந்ததில்லையென்றே துணிந்து கூறலாம். பூணுதற்கு முத்தாரமும், இலங்கு மிளிர் மணி வயிரக் கோவையும், மெய்க்கினிதாய் நாறும் கஸ்தூரியும் கமழ் சாந்தும், அணிந்து கொள்வதற்கு மூக்குக் கண்ணாடியும் வீழிமிழலையில் அப்பருக்கும், சம்பந்தருக்கும் நித்தலும் அளித்த காசு தமக்கும் அளிக்க வேண்டுமென்றும், இவர்ந்து செல்வதற்குக் காற்றனைய கடும்பரிமாவும், திண்ணென்றிருக்கும் தேக ஆரோக்யமும் பொறி விரவு நற்புகர் கொள்பொற் சுரிகை மேலோர் பொற்பூவும், பட்டிகையும், பட்டாடையும், இன்னும் இவைபோன்ற பலவற்றையும், நம் நாயனார் தேடாத நாளே கிடையாது.

"மந்திரம் ஒன்று அறியேன்
மனைவாழ்க்கை மகிழ்ந்தடியேன்
சுந்தர வேடங்களால்
துரிசே செயும் தொண்டன்"



"பண்மயத்த மொழிப்பரவை
சங்கிலிக்கும் எனக்கும்
பற்றாய பெருமானே
மற்றாரை உடையேன்
உண்மயத்த உமக்கடியேன்
குறைதீர்க்க வேண்டும்
ஒளிமுத்தம் பூணாரம்
ஒண்பட்டும் பூவும்
கண்மயத்த கத்தூரி
கமழ்சாந்தும் வேண்டும்
கடல் நாகைக் காரோணம்
மேவியிருந்தீ ரென்
றண்மயத்தா லணி நாவல்
ஆரூரன் சொன்ன
அருந்தமிழ்க ளிவைவல்லார்
அமருலகாள்பவரே"

என்னும் இதுபோன்ற செந்தமிழ்ப் பாக்களால்தான், "சுந்தரன் பொன்னுக்குப் பாடினான்" என்பது நம்முட் பெருவழக்கா யிருக்கின்றது.

இவற்றையெல்லாம், படித்தும், கேட்டும் நம்முட் பெரும்பாலரான ஆண் மக்கள், தாங்கள் காரியாலயத்திலிருந்து வரும்போது தம் மனைவிமார்க்கு ஒரு காலணாவிற்குப் பூ வாங்கி வந்தால் ஏதோ முழுகிப்போவதாகவும், தம் அந்தஸ்திற்குத் தாழ்மையாகவும் நினைக்கின்றார்கள். பாவம் கெண்டையைப் போட்டு வராலிழுக்கும் நுட்பம் இவர்களுக்குத் தெரியாது.

அன்பர்களே, உமது மனைவிமார்கள், அலங்கோலமாய் இல்லாமல், நன்றாய் உடுத்து அணிகலன்களைப் பூண்டு உங்கட்கு மகிழ்ச்சி தரும்படி எதிர்பார்க்கின்றீர்க ளல்லவா? அது போன்றே, உமக்காக இல்லாமற் போனாலும், அவர்கள் பார்த்து மகிழ்தற் காதல், நீங்கள் சுத்தமாகவும், நன்றாகவும் உடுத்து அவர்கட்கு அம்மகிழ்ச்சியைத் திருப்பிக் கொடுக்க வேண்டாமா? பெண்களுக் கெதிரில் முழு ஆடையின்றி அலங்கோலமாய் நின்றும், இருந்தும், கிடந்தும் நடந்தும் திரியும் ஆடவர்களை நாம் பார்த்திருக்கின்றோம். வீட்டு வாசலிலும், கூடத்திலும் பெண்களின் நடுவில் கௌபீனத்தோடு எண்ணெய் தேய்த்துக் கொள்ளும் ஆண் மக்கள் எமக்குத் தெரியும். தெருத் திண்ணைகளில் சரியான ஆடையின்றி க்ஷவரஞ் செய்து கொள்கிறவர்கள் நம் நாட்டில் சர்வ சாதாரணம். பெண்கள் நடமாடும் பொது இடங்களிலும், தெருக்களிலும் கூச்சமின்றி நண்பகலில் மல மூத்திரங்களைக் கழிக்கும் தீய வழக்கம் இன்னும் வயதான ஆடவர்களை விட்டுக்கூட ஒழியவில்லை. பெண்களுக்கன்றி ஆடவ நன்மக்களுக்கும், இத்தீ யொழுக்கங்கள் வெறுப்பையும் மனச் சலிப்பையும் தோற்றுவிக்கும் என்பதை நாம் கணப்போதாதல் நினைப்பதில்லை. என்னே நம் கல்வி யறிவொழுக்கங்கள்! என்னே நம் நாகரிகம்! நம் கடவுள் வழிபாடு தான் என்னே! வெற்றாரவார மன்றிப் பிறவென்?

நம் நாயனாரைப் பாரீன்கள். தம் நோக்குகள் இருண்டு போனதற்கு, தமக்காக அவர் சிறிது வருந்தினாரேனும், மற்றவர்களுக்கு அதிலும் முக்கியமாகப் பெண்களுக்குத் தம் காட்சி வெறுப்பையும், இன்னலையும் தருமே, என் செய்வது என்று பெரிதும் அஞ்சினார்.

"கழித்தலைப்பட்ட நாயது போல
ஒருவன்கோல் பற்றிக்காக இழுக்கை
ஒழித்துநீ அருளாயின செய்யாய்
ஒற்றியூரெனும் ஊருறை வானே"

" அகத்தில் பெண்டுகள்
யாளென்று சொன்னல்
அழையேல் போ குருடா!
எனத் தரியேன்
முகத்தில் கண்ணிழந்து
எங்ஙனம் வாழ்வேன் "

என்று கல்லுங் கரையுமாறு நாயனர் கூறும் மொழிகள் மேற் போந்த எமது கூற்றை வலியுறுத்துவனவாகும்.

இதுகாறுங் கூறியவாற்ருல், ஒவ்வொருவரும் மணவாழ்விற் சுகம் பெற வேண்டுமானல் சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் பேரிலக்கியமாகக் கொள்ளுதல் வேண்டும். ஆனல், ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை மணந்தவர்கள் பேரிடர்ப்படுவ ரென்பதற்கு, சுந்தரமூர்த்தி சுவாமிகளே சான்ருவார். ஆகவே இத்தகைய இன்னலினின்றும் அன்பர்கள் தம்மை விலக்கிக் கொள்ள வேண்டும். இந்த எச்சரிக்கையோடு இக்கட்டுரையை முடிக்கின்ரேம்.

" அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின் [புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவ தெவன் "

உள்ள முவக்கும் முல்லை நிலத்தில் கணவனும் மனைவியும் நேசமாக மருவி வாழும் இயற்கை யழகினைப்படம் பிடித்துக் காட்டும் குறுந் தொகையுள் 167 வது பாட்டை அன்பர்கள் அறியுமாறு கீழே தருகின்ருேம்.

" முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்
குவளை உண்கண் குய்ப்புகை கமழத்
தான் துழந்து அட்டதீம் புளிப்பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல்
[முகனே.'

# மதிப்புரை

**கம்மபாலன் :** இது கம்ம குலத்தினர்களின் முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு உழைத்துவரும் ஒரு மாதப் பத்திரிகை. இதில் பல பொது விஷயங்களும், ஆங்கில மொழி பெயர்ப்புகளும் வெளி வருகின்றன. இதன் ஆசிரியர் திருவாளர் R. வேங்கடசாமி நாயுடு அவர்கள். வருட சந்தா தபாற்கூலியுள்பட உள்நாட்டிற்கு ரூ. 1—0—0; வெளி நாட்டிற்கு ரூ. 1—4—0. ஒவ்வொருவரும் - முக்கியமாகக் கம்ம குலத்தினர்கள் இதனை ஆதரிக்கவேண்டுகிறேம். மாதிரி பிரதி இனம். வேண்டுவோர் பத்திராதிபர், " கம்மபாலன், " திருத்தங்கல், என்று எழுதவும்.

*** *** ***

**மருத்துவன் :** பத்திராசிரியர் பண்டிட் S. S. ஆனந்தம் அவர்கள். வருட சந்தா ரூ. 3—0—0. கிடைக்குமிடம் .—"மருத்துவன்" ஆபீஸ், 221, தங்கசாலைத்தெரு, சென்னை. இது மருந்து முறை பலவற்றையும் குழந்தை பாதுகாப்பு, சுகாதாரம் முதலான அரிய விஷயங்களையும் வெளியிட்டு வருவது. இதனல் பலர் சுகவாழ்க்கையை எளிதில் அறியலாம். இது ஒவ்வொருவர் வீட்டிலும் இடம் பெறத்தக்கதாகும்.

*** *** ***

**ஒட்டக்கூத்தர் வாலாறு :** இது கோவை - திரு. சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்கள் எழுதியது. தமிழ் நாவலர் சரிதை, சோழமண்டல சதகம், தக்கயாகப் பரணி, மூவருலா, கல்வெட்டுக்கள், மெய்க்கீர்த்திகள், தொண்டைமண்டல சதகம் போன்ற பழமையான நூல்களைக் கருவியாகக்கொண்டு இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது. தமிழுலகம் உண்மை உணர்ந்து உறுதி தலைக்கூடி உய்யும்பொருட்டு உள்ளதை உள்ளவாறே கிளக்க வேண்டி ஆசிரியர் எடுத்துக்கொண்டிருக்கும் உழைப்பு, ஆராய்ச்சி முதலியவை தமிழ் மக்களால் நன்கு பாராட்டற்குரியன. ஆராய்ச்சித் திறன்மிகுந்த இந்நூலைப்போலப் பன்னூல்களை ஆசிரியர் இனியும் எழுதி வெளியிட வேண்டுமென்பதே எமது வேண்டு



கோள். இந்நூலின் விலை ரூபாய் ஒன்றே. வேண்டுவோர் மதுரை, புத்தக வியாபாரம், திரு. இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன் என்னும் விலாசத்திற் கெழுதவும்.

*** *** ***

**அருட்குரு :** இது சிதம்பரம் இராமலிங்க அடிகளின் திருவருட் பெருந்துணை கொண்டு நிறுவிய சென்னை, சமரச சன்மார்க்க சங்கக் காரியதரிசி திரு. சாம்பசிவ முதலியார் அவர்களால் எழுதி வெளியிடப்பட்டது. அடிகளின் அருட்டிறத்தை அருமையாய்த் தெரிப்பது. கிடைக்கு மிடம் : திரு. T. S. அப்பாதுரை முதலியார், 18, முத்துக்கிருஷ்ணன் தெரு, தங்கசாலை, சென்னை.

*** *** ***

**சிவஞான தத்துவ தீபம் :** இது சைவசித்தாந்த தத்துவத் துறையினை விளக்கி யுரைப்பான் எழுந்த ஒரு செய்யுள் நூலாகும். இதன் ஆசிரியர், யாழ்ப்பாணத்து நீர்வேலி ஸ்ரீமத் முத்துக்குமார சுவாமிகளாவர். இது " பார் விரித்த நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே ஓர் விருத்தப் பாதி போதும் " எனச் சிவபோகசார முடையாரானும், " பாதிவிருத்தத்தால் இப்பார் விருத்தமாக வுண்மை, சாதித்தார் பொன்னடியைச் சாருநா ளெந்நாளோ " என நந்தாயுமான சுவாமிகளானும் எடுத்தோதப்பெற்ற சிவஞான சித்தியார் என்னும் சைவ சித்தாந்த ஞானசாத்திரத்தின் வழித்தாய், மற்றதன் சொல்லும் பொருளுமே பெரிதும் தழிஇ இயற்றப்பெற்றதா யிலங்குகின்றது. சைவசித்தாந்த நூலாசிரியர்கள் அவ்வந்நூற்களின் ஆண்டாண் டெடுத்துரைத்துப் போந்த தத்துவ வுண்மைகள் பலவற்றையும் நன்குணர்ந்து இவர் இந்நூலை யாத்திருத்தல் மிகவும் அருமைப் பாடுடையது. 'அத்துவித சம்பந்தத்திற் குவமை' என இவர் வைத்தப்பாடிய,

பண்ணொலிவிண் ணிரவிமதி யெள்நெய்தீ யயம்பானி யுப்புவான்காற்
றுண்ணிலவு முடலுயிர்நீர் நிழலுச்சிப் பளிங்குபக லொளிவிளக்கு
வெண்ணிற முற் றிடுபால்நீ ரம்பகம்வெய் யவனுன்ம வறிவுங்காணுங்
கண்ணொளிபோற் சிவசீவ ரத்துவிதக் கலப்பிருக்குமெனக் காண்பீரோ.

என்னுஞ் செய்யுள்,

பண்ணிசை வெம்பரிதிமதி திலதைலம் தீயிரும்பு பாணியுப்பு
விண்ணனில முடலுயிர்நீர் நிழலுச்சி பளிங்குபகல் விளங்குபால்நீர்
கண்ணிரவி வுணர்வொளிபோற் பிரிவரிய வத்துவிதக் கலவிகாட்டித்
தண்ணளிவைத் தெனையாண்ட துறைசைநமச் சிவாயகுரு சரணம்போற்றி.

எனவரும் ஆசிரியர் மாதவச் சிவஞான முனிவரர் திருவாக்கை முற்றும் பின்பற்றி நிற்றல் காண்க. சைவசித்தாந்த தத்துவசாத்திர நல்லுணர்வின் மிக்க இவர்கள் இந்நூலை உரை நடையில் இயற்றி யிருப்பார்களானல் அதனன் விளையும் விழுப்பயன் பெரிதாமெனக் கூறன் எட்டுணையு மிழுக்காது. 'செய்யுள் விஷய அடக்கம்' என்னுந் தலைப்பின்கீழ் இவர் குறித்துக் காட்டிட்ட அங்கங்களைத் தக்கதோர் ஆற்ருன் விரித்தெழுதல் நலம். இது முதற் பாகமாக வெளியிடப்பட்டுள்ளது. இதன் இரண்டாம் பாகம் விரைவில் வெளிவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 'சன்மார்க்கஞ் சகல கலை புராண வேத சாத்திரங்கள் சமயங்கள் தாம் பலவுமுணர்ந்து' எனச் சிவஞான சித்தியாரின் எட்டாஞ் சூத்திரத்து வரும் செய்யுட் பொருட் பகுதியோடு இம் முதற்பாகம் முடிவுறுகின்றது. இது, வேட்டைக்காரன் புத்தூர் அ. பொன்னுசாமி ஆச்சாரியாரால் பொள்ளாச்சி விவேகானந்த அச்சியந்திர சாலையில் பதிப்பிக்கப் பட்டுள்ளது.

*** *** ***

**சைவ சித்தாந்த பரிபாஷை :** (தமிழ் மொழிபெயர்ப்பு.) இது சூரிய சிவாசாரியர் என்பவரான வடமொழியி னியற்றப்பட்டதோர் அரிய சைவ சித்தாந்த நூலாம். சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கத்துச் சமஸ்கிருத பண்டிதர் நா. கிருஷ்ணசாஸ்திரிகளால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இஃது, அச்சங்கத்தின், வியாகரண சிரோமணி, வித்துவான், மு. சுப்பிரமணிய சாஸ்திரிகளாலும், சித்தாந்த போதகர், திரு. போ. முத்தைய பிள்ளை அவர்களானும் பார்வையிடப் பெற்று தேவகோட்டை சிவாகம சித்தாந்தப் பரிபாலன சங்கத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது. இது, 'உபோத்காத பரிச்சேதம், பிரமாண பரிச்சேதம், பதிபரிச்சேதம், பசு பரிச்சேதம், பாசபரிச்சேதம், விநியோக பரிச்சேதம்' என்னும் ஆறு பிரிவினை யுடையது. பதி, பசு, பாசமென்னும் முப்பொருள்களது உண்மை இலக்கணங்கள்

தருக்கசெடிலமாக இதன்கண் செவ்விதின் எடுத்து விளக்கப்படுகின்றன. ‘சித்தாந்தம்’ என்னும் சொல் காரணத்தானும், இடுகுறியானும் சைவ சாஸ்திரங்களுக்கே உரியதாமென்பது இந்நூலாசிரியரால் நன்கு விளக்கி வலியுறுத்தப்படுகின்றது. ஏகான்ம வாத முத்திநிலை, விஞ்ஞான கேவலா வித்தையிற் சென்று படுமாறும், சாங்கிய மதத்திற் கூறப்படும் மூலப்பிரகிருதியினுடுக்க ரூபமான கேவலத்தன்மை பசு நிலையிற் சென்று படுமாறும், இதன்கண் அளவை முறையான் அறுதி யிட்டுரைக்கப்படுகின்றது. முற்றும் தருக்க வரம்புற்றுத் திகழும் இந்நூல் இனிய எளிய தமிழ் நடையில் வெளிவருவதால் சைவ சித்தாந்த தத்துவ வுணர்ச்சி பெற விரும்பும் ஒவ்வொருவரும் கற்றற்குரிய நூற்களில் இதுவும் வைத்துப் போற்றற்குரியது. இதன் விலை அணு 8. இது வேண்டுவோர், பெரிய காஞ்சிபுரம், புண்ணியகோடி சோமசுந்தர குருக்கள் அவர்கள்; மாயவரம், சிவாகம பாடசாலை ஆசிரியர், வைத்தியநாத குருக்கள் அவர்கள்; தேவகோட்டை சிவாகம சங்கக் காரியதரிசி அவர்கள், ஆகிய இவ்விடங்களின்று பெற்றுக் கொள்ளலாம்.

* * *

**காசி காண்ட வசனச் சுருக்கம்:** (பூர்வ காண்டம்) இது திருக்கைலாய பாரம்பரைத் தருமபுர வாதீனத்தைச் சார்ந்த, காசிவாசி, தரு, ஞான, நாகலிங்கத் தம்பிரான் சுவாமிகளால் இயற்றப்பட்டு, சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் போசிரியர் திரு. மணி. திருநாவுக்காசு முதலியார் அவர்களால் பார்வையிடப்பெற்றது. இது, அரசர்பெருமான்களில் ஒருவரான, அதி வீரராம பாண்டியரான் இயற்றப்பட்ட காசிகாண்டம் என்னும் செய்யுள் நூலின் வழித்தாய் இயற்றப்பட்டதோர் வசன நூலாகும். இதன்கண் கற்பிலக்கணம், தீர்த்த மகிமை சப்தபுரிகளின் சிறப்பு, கங்காநதியின் சிறப்பு, இல்லொழுக்கம், ஆசாரம், ஆதிய பொருட் பகுதிகள் சிவசன்மாவின் வரலாற்றுடன் இணைத்துரைக்கப்படுகின்றன. சைவர்கள் அனைவரும், காசிமான்மிய மறிய விரும்புனர் பலரும் படித்தற்குரியது. சிவபக்தியிற் சிறந்த புண்ணிய சீலர்களான திரு. ப. சிவசுப்பிரமணியம் பிள்ளை அவர்களாலும், திரு. ப. தானப்ப முதலியார் அவர்களாலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதன் விலைஅணு 6. வேண்டுவோர், ம. தானப்ப முதலியார், 43, வேங்கடாசல முதலியார் வீதி, பார்க்கு டவுன், சென்னை என்ற விலாசத்திற்கெழுதிப் பெறலாம்.

---

# சித்தாந்தத்தைப் பற்றிய சில மதிப்புரைகள்

* * * சைவசித்தாந்த சமாஜத் தொடர்பாகச் “சித்தாந்தம்” என்னும் ஒரு புதினத்தாள் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அஃதும் இடையில் நின்று விட்டது. மீண்டும் அது தலைகாட்டியிருக்கிறது. இம்முறைஅப்பத்திரிகை ஒழுங்கு பெற இயங்கத்தக்க முயற்சி செய்யப்பட்டிருப்பதாக அறிகிறோம். பௌராணிக மதத்தொடு சைவ சித்தாந்தங் குழப்பப்படுதலால், சைவமும் ஒரு பௌராணிக மதமாகப் பல விடங்களில் கருதப்படுகிறது. சமரசத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள சைவ நெறியைப் பரப்புந் துறை நண்ணிச் ‘சித்தாந்தம்” கடனாற்றுமென எதிர் பார்க்கிறோம்.

“நவசக்தி”

* * *

இப்பெயர்கொண்ட புத்தக வடிவான ஒரு தமிழ்ப்பத்திரிகையை, சென்னைச் சைவசித்தாந்த மகாசமாஜத்தார் மாதந்தோறும் வெளியிடத்தொடங்கியிருக்கிறார்கள். இம்முயற்சி சித்தாந்த சைவத்திற்கு மிகவும் அநுகூலமானதாம். இதன் முதலிதழ் வரப்பெற்றேம். இதன் ஆசிரியர் ஸ்ரீ மணி. திருநாவுக்கரசு முதலியாரவர்களாவர். இதனகத்து ‘சித்தாந்தம்’ ‘சைவசாரம்’ ‘ஒட்டிட்டபண்பு’ ‘சைவசித்தாந்தமும் மேல்நாட்டு அறிவியல் நூல்களும்’ ‘ஆன்ம வாழ்க்கையும் புலால் மறுத்தலும்’ ‘திருப்பணி வேலையில் விளையுஞ் சில தீங்குகள்’ என்னும் அரியவியாசங்கள் சுத்த தமிழ் வசன நடையிற் பிரமாண சகிதமாக அறிஞரால் எழுதப்பட்டுள்ளன. பிரதி கண்கவரும் வனப்பினதாய் அமைந்திருக்கின்றது.

“இந்து சாதனம்”

* * *

சென்னை, சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் பத்திரிகையாகத் தோன்றித் திகழ்ந்து சில ஆண்டுகளாக மறைந்திருந்த ‘சித்தாந்தம்’ என்ற மாதப்பத்திரிகை புத்துயிர் பெற்றுத் திகழ்வதை நோக்கி மகிழ்ச்சி யடைகின்றோம். இதன் முதல் இரண்டிலக்கங்கள் வரப்பெற்றோம். சைவத்தின் அருமை பெருமைகளை விளக்கும் பல அரியகட்டுரைகளை இவை தாங்கி நிற்கின்றன. திருவாளர் மணி. திருநாவுக்காசு முதலியார் இதன் ஆசிரியராவார். வையச் சமயமென்று அறிஞர்கள்



போற்றும் சைவ சமயத்தை வளர்க்குமாறு தோன்றியுள்ள இப்பத்திரிகையைப் பல வழிகளிலும் ஆதரிப்பது தமிழ் மக்கள் கடனாம்.

“லோகோபகாரி.”

* * *

சென்ற இருபதாண்டுகளாய் ஒருவாறு மறைந்திருந்து இக்காலத்தார் செய்த நற்றவத்தின் பயனாய்ச் ‘சித்தாந்தம்’ என்ற மாத சஞ்சிகை மீண்டும் வெளிவந்தமை கண்டு பெரிதும் மகிழ்வடைகிறோம். நாற்பெருங் குரவர் நயந்து காட்டிய நல்வழி பற்றிப் பெரும் பீடுற்ற சைவசித்தாந்த வெளியீட்டுக்கு மணி. திருநாவுக்கரையர் ஆசிரியராகவும், வித்துவான் பாரிப்பாக்கம் கண்ணப்பனார் உதவி யாசிரியராகவும் அமைந்தது தமிழ் நாட்டார் தவப்பயனே. இச் சித்தாந்தமலர் இடையறாது மலர்ந்து சைவ மணங் கமழ்ந்து அருளொளும் தேன் பிலிற்றித் தமிழ் நாட்டாரை, வாரியுண்டுத் தேக்கித் திளைக்குமாறு உதவி புரிந்து வருமென நம்புகிறோம். * * * * * *

“திராவிடன்”

* * *

பச்சையப்பன் கல்லூரித் தமிழாசிரியர் திருவாளர் மணி. திருநாவுக்கரசு முதலியாரவர்களை இதழாசிரியராகவும், வித்துவான் பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியாரவர்களை உதவியிதழாசிரியராகவுங்கொண்டு சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் வெளியீடாக வெளிப்பட்ட சித்தாந்தம் என்னும் பெயரிய ஒரு திங்களிதழின் முதலிதழைப் பார்த்தேம். சைவசித்தாந்த சமாஜமென்பது மாப்பெரும் புலவராய்த் திகழும் ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசல மென்னும் உயர்திரு மறைமலையடிகளால் இற்றைக்கு 22 ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பட்டது. * * அவ்வெளியீடு ராயல் 24 பக்கங்களில் அரும் பேரறிஞர்களின் அரும் பெருங் கட்டுரைகளைத் தன்கட்கொண்டு வெளிவருகின்றது. சித்தாந்தத்துக்கென ஒரு வெளியீடு திறமான ஆசிரியர்களைக்கொண்டு வெளி வரப்பெற்ற சைவ மக்கள் அதனைப் போற்றக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

“செந்தமிழ்ச் செல்வி”

* * *

சென்னையிலிருந்து வெளிவரும் சித்தாந்தம் எனும் அரிய திங்கள் வெளியீட்டின் முதன்மலரின் ஈரிதழ்களைப் பெற்றுளேம். சைவ சித்தாந்த மகாசமாசத்தின் சார்பில், சிறந்த தமிழறிஞர்களாகிய திருவாளர் மணி. திருநாவுக்கரசு முதலியார், பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார் ஆகிய இருவர்களாலும் நடாத்தப்படும் இது, அவ்வாசிரியர்களாலும் ஏனைப் பேரறிஞர்களாலும் எழுதப்பெற்ற அரிய இனியகட்டுரைகளும்கொண்டு வெளிவருகின்றது. சிறந்த கட்டுரைகளின் நலமும் அச்சு நலமும் கொண்டுவரும் இதற்கு ஆண்டுவரி ரூபா ஒன்றரையே யாகுமெனின், இது ஊதியம் கருதாது சைவத்தொண்டு தமிழ்த் தொண்டுகளையே கருதிவெளிவருவதென்பது இனிது புலனாகு மன்றோ! இதனைத் தமிழ் நாட்டினரெல்லோரும், சிறப்பாகச் சைவமதத்தினர் எல்லோரும், பெற்றுத் தமக்கும் சைவத்திற்கும் நன்மை புரிந்து வருவார்களாக. தமிழ்நாட்டுச் சைவ மடங்களின் அருட்குரவர்கள் இதனை நன்கு புரந்தருள்வார்களாக.

“தமிழ்ப் பொழில்”

* * *

சைவ ஆகமத்தின் சிறப்பை எம் மக்களும் அறியுமாறு எளிய தமிழில் இனிய மொழியில் மாதமொரு முறை சென்னைப் பச்சையப்பன் கல்லூரி ஆசிரியர் திரு. மணி. திருநாவுக்காசு முதலியார் அவர்களைத் தலைமை ஆசிரியராகக் கொண்டு “சித்தாந்த”மெனும் பத்திரிகை அறிவை வளர்க்கும் அரிய விஷயங்களை உட்பொருளாகக்கொண்டு வெளிவருகிறது. சமரசமே சைவ மதத்தின் சிறப்பு என்ற உண்மையை விளக்கிக் காட்டிய சிதம்பரம் இராமலிங்க சுவாமி அவர்களின் அறிவு வளர்ச்சி, சமூக உழைப்பு, சிவமும் அருளும் எனப் பலவகையிலுள்ள விஷயங்களைப் படித்தறியவும் சைவமதத்தின் சிறப்பை அறியவும் “சிந்தாத்தத்தை” எம்மக்களும் பெற்று நல்லறி வடைவார்களாக! * * * செந்தமிழ் நாட்டிலே சைவமத நம்பிக்கை வரவரக் குறைந்து வருவது கண்கூடு. இக்குறை மெய்க்குறை யாதலால் அக்குறையைத் தீர்த்துவான் வேண்டிச் சென்னைச் சித்தாந்த சமாஜத்தின் சார்பிலே திங்கள் தோறும் சித்தாந்த மெனும் உயரிய செந்தமிழ்த் தத்துவப்பத்திரிகை வெளிவருகிறது. சைவமதத்தின் உண்மைகளைத் தெள்ளிய நடையில் விரிவாயுரைக்கும் இம்மாத (அக்டோபர் 1928) வெளியீடு உண்மையில் தமிழ்மக்களுக்குப் பெரும் நன்மையை அளிக்கு மென்பதில் சந்தேக மில்லை. தமிழறிவை வளர்த்துச் சைவமத உண்மைகளை உணர்வதற்கு ஓர் பெருந்துணையானது. ஆகவே தமிழ்மக்கள் சித்தாந்தத்தைப்பெற்று அறிவைப் பெருக்குவது அவசியம்.

“சுதேசபரிபாலினி”

---

## சைவ சித்தாந்த மஹா சமாஜம்—சென்னை.

### 1928-வரு அக்டோபர் மாதத்திய வரவு செலவு கணக்கு.

**வரவு**

| விவரம் | அக்டோபர் மாதம் ரூ. | அ. | பை. | 1-12-1927 முதல் 31-10-1928 வரை ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|
| வேளாள ஐக்கிய நாணய சங்கம் சேவிங்ஸ் பாங் ... | 75 | 0 | 0 | 163 | 0 | 0 |
| தபாலாபீஸ் சேவிங்ஸ் பாங் ... | ... | ... | ... | 57 | 0 | 0 |
| சித்தாந்தம் சந்தா வசூல் ... | 8 | 8 | 0 | 795 | 6 | 0 |
| சித்தாந்தம் அச்சிட நன்கொடை ... | ... | ... | ... | 365 | 0 | 0 |
| விளம்பர சார்ஜ் ... | 6 | 0 | 0 | 17 | 0 | 0 |
| வருடாந்தர மீட்டிங்கிற்கு நன்கொடை ... | ... | ... | ... | 35 | 0 | 0 |
| வி. பி. தபால் வரவு ... | 0 | 2 | 0 | 27 | 10 | 0 |
| சந்தா முன் பணம் ... | ... | ... | ... | 11 | 8 | 0 |
| டிபாசிட் வட்டி வரவு ... | ... | ... | ... | 4 | 7 | 6 |
| மொத்தம் ... | 89 | 10 | 0 | 1475 | 15 | 6 |
| ஆரம்ப இருப்பு ... | 16 | 6 | 9 | 74 | 8 | 6 |
| | 106 | 0 | 9 | 1550 | 8 | 0 |

**செலவு**

| விவரம் | அக்டோபர் மாதம் ரூ. | அ. | பை. | 1-12-1927 முதல் 31-10-1928 வரை ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|
| வேளாள ஐக்கிய நாணய சங்கம் சேவிங்ஸ் பாங் ... | 6 | 0 | 0 | 644 | 7 | 6 |
| தபாலாபீஸ் சேவிங்ஸ் பாங் ... | ... | ... | ... | 82 | 4 | 0 |
| சித்தாந்தம் அச்சுக்கூலி காகிதம் உள்பட ... | 58 | 12 | 0 | 480 | 12 | 0 |
| பிளாக்குகள் ரப்பர் ஸ்டாம்புகள் ... | ... | ... | ... | 12 | 8 | 0 |
| மீட்டிங் நோட்டீஸ், பிரவேச விண்ணப்பம் அச்சுக் கூலி ... | ... | ... | ... | 5 | 0 | 0 |
| வருடாந்தர மீட்டிங்கிற்கு அறிக்கை Etc., | ... | ... | ... | 73 | 8 | 0 |
| தபால் செலவு ... | 12 | 1 | 0 | 192 | 5 | 6 |
| கணக்குப் புஸ்தகம் பேனா முதலியன ... | ... | ... | ... | 8 | 9 | 0 |
| சில்லரைச் செலவு ... | 2 | 3 | 6 | 24 | 1 | 9 |
| மொத்தம் ... | 79 | 0 | 6 | 1523 | 7 | 9 |
| முடிவு கையிருப்பு ... | 27 | 0 | 3 | 27 | 0 | 3 |
| | 106 | 0 | 9 | 1550 | 8 | 0 |

**சமாஜத்தின் பொருள் வலிவு**

| | | | | |
|---|---|---|---|---|
| வேளாள ஐக்கிய நாணய சங்கத்தில் | ரூ. | 481 | 7 | 6 |
| தபாலாபீஸ் சேவிங்ஸ் பாங்கியில் | „ | 25 | 4 | 0 |
| கையிருப்பு | „ | 27 | 0 | 3 |
| மொத்தம் | „ | 533 | 12 | 9 |

ம. பாலசுப்ரமணிய முதலியார், காரியதரிசி.

C. இரத்தின முதலியார், பொருட் காப்பாளர்.

வே. மாணிக்க முதலியார், கணிதபரிசோதகர்.

## சைவ சித்தாந்த மஹா சமாஜம்—சென்னை.

### 1928-வரு நவம்பர் மாதத்திய வரவு செலவு கணக்கு.

**வரவு**

| விவரம் | நவம்பர் மாதம் ரூ. | அ. | பை. | 1-12-1927 முதல் 30-11-1928 வரை ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|
| வேளாள ஐக்கிய நாணய சங்கம் சேவிங்ஸ் பாங் ... | ... | ... | ... | 163 | 0 | 0 |
| தபாலாபீஸ் சேவிங்ஸ் பாங் ... | ... | ... | ... | 57 | 0 | 0 |
| சித்தாந்தம் சந்தா வசூல் ... | 15 | 0 | 0 | 810 | 6 | 0 |
| சித்தாந்தம் அச்சிட நன்கொடை ... | ... | ... | ... | 365 | 0 | 0 |
| விளம்பர சார்ஜ் ... | ... | ... | ... | 17 | 0 | 0 |
| வருடாந்தர மீட்டிங்கிற்கு நன்கொடை ... | ... | ... | ... | 35 | 0 | 0 |
| வி. பி. தபால் வரவு ... | 0 | 12 | 0 | 28 | 6 | 0 |
| சந்தா முன் பணம் ... | ... | ... | ... | 11 | 8 | 0 |
| டிபாசிட் வட்டி வரவு ... | ... | ... | ... | 4 | 7 | 6 |
| மொத்தம் ... | 15 | 12 | 0 | 1491 | 11 | 6 |
| ஆரம்ப இருப்பு ... | 27 | 0 | 3 | 74 | 8 | 6 |
| | 42 | 12 | 3 | 1566 | 4 | 0 |

**செலவு**

| விவரம் | நவம்பர் மாதம் ரூ. | அ. | பை. | 1-12-1927 முதல் 30-11-1928 வரை ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|
| வேளாள ஐக்கிய நாணய சங்கம் சேவிங்ஸ் பாங் ... | ... | ... | ... | 644 | 7 | 6 |
| தபாலாபீஸ் சேவிங்ஸ் பாங் ... | ... | ... | ... | 82 | 4 | 0 |
| சித்தாந்தம் அச்சுக்கூலி காகிதம் உள்பட ... | ... | ... | ... | 480 | 12 | 0 |
| பிளாக்குகள் ரப்பர் ஸ்டாம்புகள் ... | ... | ... | ... | 12 | 8 | 0 |
| மீட்டிங் நோட்டீஸ், பிரவேச விண்ணப்பம் அச்சுக் கூலி ... | 9 | 8 | 0 | 14 | 8 | 0 |
| வருடாந்தர மீட்டிங்கிற்கு அறிக்கை Etc, | ... | .. | ... | 73 | 8 | 0 |
| தபால் செலவு ... | 15 | 15 | 3 | 208 | 4 | 9 |
| கணக்குப் புஸ்தகம் பேனா முதலியன ... | ... | ... | ... | 8 | 9 | 0 |
| சில்லரைச் செலவு ... | 4 | 15 | 0 | 29 | 0 | 9 |
| மொத்தம் ... | 30 | 6 | 3 | 1553 | 14 | 0 |
| முடிவு கையிருப்பு ... | 12 | 6 | 0 | 12 | 6 | 0 |
| | 42 | 12 | 3 | 1566 | 4 | 0 |

**சமாஜத்தின் பொருள் வலிவு**

| | | | | |
|---|---|---|---|---|
| வேளாள ஐக்ய நாணய சங்கத்தில் | ரூ. | 481 | 7 | 6 |
| தபாலாபீஸ் சேவிங்ஸ் பாங்கியில் | „ | 25 | 4 | 0 |
| கையிருப்பு | „ | 12 | 6 | 0 |
| மொத்தம் | „ | 519 | 1 | 6 |

ம. பாலசுப்ரமணிய முதலியார், காரியதரிசி.

C. இரத்தின முதலியார், பொருட் காப்பாளர்.

வே. மாணிக்க முதலியார், கணிதபரிசோதகர்.

# கந்தபுராணம்

## வசனம்

முருகப் பெருமான் திருவவதாரத்தைப் பற்றி உரைக்கும் நூல்கள் யாவற்றினும் சிறந்தது கந்தபுராணமே ஆகும். அதுவே முருகவேள் வரலாற்றை முற்ற முடிய நவரசம் பொருந்த இனிய தமிழ்ச் செய்யுட்களால் சைவ சித்தாந்த நெறிபிறழாமல் கூறிச் செல்கின்றது. கந்தபுராணத்தைச் சைவர் படனஞ் செய்தலோடு அமையாது பூசித்தும் வழிபாடு செய்கின்றனர். பிறசமயத்தாரும் முருகனை வழிபட்டும் அவன் அற்புத மான்மியம் கனிவிளங்கும் திருப்புகழ்ப் பாடல்களை இசையுடன் ஓதியும் இன்புற்று வருகின்றனர். ஆதலால் கந்தன் அருமை பெருமைகளை அனைவரும் அறியவேண்டுவது இன்றியமையாததாகும். கந்தபுராணம் செய்யுள் வடிவத்திலே யாக்கப் பட்டிருத்தலின் அதனைப் பயில்வோர் இலக்கண இலக்கியப் பயிற்சி உடையவராக இருந்தால் அன்றி அது மிக்க பயன் விளைக்க மாட்டாததாகும். இப்போதுள்ள வசன நூல்களும் மிக விரிந்தும் செய்யுட்களின் போக்கைத் தழுவாமலும் எழுதப் பட்டிருக்கின்றன. இக்குறையெல்லாம் நீங்கும்பொருட்டும் கந்தர் சஷ்டிவிரதம் அனுட்டிப்போர் ஆறு நாட்களில் முழுதும் பாராயணம் செய்து முடித்துச் சித்தியடையும் பொருட்டும் பொருத்தமாக இந்நூல் தெள்ளிய இனிய செந்தமிழ் நடையிலே கந்தபுராணச் செய்யுட்களின் கருத்துக்களையும் முறைமையையும் தழுவிச் சுருக்கமாகத் திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் மடாலயத்து மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் மாணவர் வித்துவான் ஸ்ரீ முத்துக்கிருஷ்ண ரெட்டியார் அவர்களால் எழுதப்பட்டுள்ளது. இதனைப் படிப்போர் மனமுருகி அன்பு வயப்பட்டு முருகதாசர்களாக விளங்குவார்கள் என்பது திண்ணம். இத்தகைய அரிய நூலிலே கண்ணுக்கினிய திருவுருவப் படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதனைப் பெண்பாலாரும், சிறுவரும், முதியோரும் எளிதில் படித்து உணரலாகும். இது தமிழழகு பூத்துச் சைவசித்தாந்த நறுமணம் வீசி, பக்தித் தேன் சொட்டி ஞானங் கனிந்து நிற்றலைக் கண்டு அன்பர் களி துளும்புவார்களாக.

| | | | | |
|---|---|---|---|---|
| ரப் பேப்பர் கலிக்கோ பைண்டு விலை ரூ. | 2 | 0 | 0 |
| கிளேஸ் பேப்பர் ,, ,, | 2 | 8 | 0 |

தபால் கூலி வேறு

**கே. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனி,**

புத்தக வியாபாரிகள், திருவல்லிக்கேணி, சென்னை.

---

## பரம இச்சா ஞான தீபிகை

D. கோபால செட்டியாரால் மொழி பெயர்க்கப்பட்டது

விலை ரூபாய் ஒன்றே.

அநாதி முத்த சித்துருவாகிய சிவபெருமானின் இச்சா ஞான சத்திகளின் சுபாவத்தையும், விரிவான தொழிற்பாடுகளையும் குறித்து இந்த ஞானநூல் எழுதப்பட்டுள்ளது. இதுவரையில் கிரகிக்க முடியாத சிதம்பர இரகசியங்கள் போன்ற அநேக தத்துவ சாஸ்திர உண்மைகள் இந்நூலில் யாவருமறிய முதல் முதல் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

இந்நூலை அநேக ஆங்கிலேய பத்திரிகைகளும் தமிழ்ப் பத்திரிகைகளும், சைவசித்தாந்த நிபுணர்களும் வியந்து பேசுகிறார்கள்.

வேண்டியவர்கள் அடியில் கண்டவருக்கு எழுதவும் :

D. கோபால செட்டியார், (முன் "நியு ரிபார்மர்" பத்திராதிபர்)
இராயப்பேட்டை போஸ்ட், சென்னை.

187126

தமிழ் நாடெங்கணும் புகழ்வாய்ந்த எங்கள் நிகரில்லாத

# அமிர்த குணபோதினி

பிரபல ஆசிரியர் ஸ்ரீமான் S. G. இராமாநுஜலு நாயுடு
அவர்களால் இப்பத்திரிகை எழுதப்பட்டு வருகிறது.

அநுபவ ஞானபோதனையில் இதுபோன்ற முதன்மையான மாத சஞ்சிகை வேறில்லை. கௌரவமான விகடம் இப்பத்திரிகை யொன்றில்தான் காணலாம். இதுவே விவேகசாரம், இதுவே ஜக விநோதினி, இதுவே விசித்திர விலாஸம், இதுவே விகடப் பொக்கிஷம், இதுவே அநுபவஞானவாரிதி, இதுவே அற்புத ஞானபோதகம், இதுவே ஆச்சரிய சிந்தாமணி, இதுவே ஆநந்த தீபம் என்று எண்ணலாம். பதினாயிரம் சந்தா தாரர்களை உடையது. இன்னும் பல்லாயிரம் சந்தாதாரர்கள் தேவை. பார்க்க அழகாய், படிக்க இனிமையாய், நினைக்க மனோகரமா யிருப்பது எது? எங்கள் "அமிர்த குண போதினி"யே. 56-பக்கங்களுடன் ஒரே ரூபாயைச் சந்தாவாகக் கொண்டுள்ள உயரிய மாதப்பத்திரிகை தமிழ் நாட்டில் இது ஒன்றேதான். இதற்குச் சமமான தமிழ் மாதப் பத்திரிகை எதுவுமே கிடையாது. இது யாவரும் அறிந்த விஷயமே. வருஷ சந்தா ரூபாய் ஒன்றே. வெளிநாடு ரூ. 1—4—0. மாதிரி காப்பி இனும்!

1-9-28.
28-2-29.

தி. இராஜகோபால் முதலியார்,
அமிர்த குணபோதினி ஆபீஸ், 302, தங்கசாலை வீதி, சென்னை.

---

ஆங்கிலேயம் படிக்க விரும்பும் அன்பர்களே! என் கவலைப் படுகிறீர்கள்?

உபாத்தியாயர் இல்லாமல்
60 நாளில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளலாம்.
7,50,000 ஜனங்களால் வாசித்துப் பிரபல்யமடைந்த

# ஆங்கில ஆசான்

அல்லது

# ஆங்கில போதினி

தமிழ் எழுத்துக்களை வாசித்தால்
இங்கிலீஷ் பதங்கள் சுலபமாய்த் தெரிந்து கொள்ளலாம்.




இது 10-ம் பதிப்பு; 800 பக்கங்களுக்கு மேல் கொண்ட
ஒரு பெரிய புத்தகம்.

உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக் கொள்ள உதவும் புத்தகம் இது ஒன்று தான். இது மாதர்களுக்கும், வியாபாரிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் மிகவும் முக்கியமானது. இப்பத்தாம் பதிப்பில் 1 அணாவிலிருந்து 3000 ரூபா வரையில் மிக சிரமப்பட்டு மாதச் சம்பளக் கணக்கு போடப்பட் டிருக்கிறது.

முழு கலிகோ பயிண்டு புத்தகம் 1-க்கு விலை ரூ. 2.

நமது லேடி டிரேட் மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.

போலி புத்தகங்களால் ஏமாற வேண்டாம்.

1-9-28.
28-2-29.

தி. இராஜகோபால் முதலியார்,
நெ. 302, தங்கசாலை தெரு, சென்னை.

இந்தியாவில் சிறந்தது என்று அனுபவசாலிகளால் மதிக்கப்படும்

**ருக்மணி குக்கர்** என்னும் சமையல் அடுக்கு உங்கள் வீட்டில் இருக்கிறதா? இல்லாவிட்டால் இன்றே ஒன்றைத் தருவியுங்கள்.

இதனால் ஒருமணி நேரத்தில் சாதத்துடன் பல பதார்த்தங்களை நீராவியினால், சிரமமில்லாமலும், சமையற்காரனுடைய உதவியில்லாமலும், மிகக் குறைந்த செலவில் தயார்செய்யக்கூடும்.

கனம் எட்டியாபுரம் ராஜா அவர்கள் எழுதுகிறார்:—மற்ற குக்கர்களைவிட ருக்மணி குக்கரே பூரண திருப்தியைக் கொடுக்கிறதென உறுதியாய்ச் சொல்லுகிறேன். இதில் சமைக்கப்படும் ஆகாரம் அதிக சத்துள்ளதாயும், தேகத்திற்கு ஆரோக்கியத்தைக் கொடுப்பதாயும் இருப்பதோடு, மற்ற குக்கர்களில் காணப்படும் துர்வாசனை இல்லாததாயும் இருக்கிறது.

ஸ்ரீமான் டாக்டர் P. வரதராஜுலு நாயுடு அவர்கள் எழுதுகிறார்:—நான் தங்கள் குக்கரை என்னுடைய வீட்டில் தினந்தோறும் சமையல் செய்வதற்கு உபயோகப்படுத்தி வருகிறேன். இதில் சமைக்கப்படும் ஆகாரம் மிகவும் நேர்த்தியான ருசியை அடைகிறது.

1, 2, 4, 6, 8 பேர்களுக்குத் தகுதியான குக்கர்கள் முறையே

13, 18, 22, 27, 33 ரூபா விலை.

ஒன்று இன்றே தருவியுங்கள். விவர புஸ்தகம் இனாம். ஏஜண்டுகள் தேவை.

1-7-28.
31-12-28.

**ருக்மணி குக்கர் கம்பனி,**

இராயபுரம், (11) மதராஸ்.

# மருத்துவன்

ஓர் உயர்ந்த வைத்திய மாதப் பத்திரிகை

பத்திராசிரியர்:—பண்டிட் S. S. ஆனந்தம் அவர்கள்

இம்மருத்துவன் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாது வேண்டியவன். இவன் நோயணுகா விதிகளை ஆண், பெண் ஆகிய இருபாலருக்கும் போதிக்கக் கூடியவன். வந்த நோய்களை எளிதாகப் போக்கிக்கொள்ளும் வழிகளைக் கூறுபவன். பெண்கள் கருப்பெற்ற காலத்திலும், கரு உயிர்க்கும் காலத்திலும் நடந்து கொள்ளவேண்டிய முறைகளையும், பாலர் பரிபாலனத்தையும், குழந்தைகளுக்கு வரும் நோய்களையும், அவற்றிற்குரிய பரிகாரங்களையும் அறிவிப்பவன். பொதுவாக மக்கள் நோயின்றித் தேக பலத்தோடும், நீண்ட ஆயுளுடனும் வாழ்வதற்குரிய வழிகளை ஆராய்ச்சி முகத்தால் எடுத்து விளக்குபவன். மக்களுக்கு உயிரினும் சிறந்த பொருள் உலகில் வேறொன்றுமில்லையாதலால் ஒவ்வொருவருடைய உயிர் வாழ்க்கைக்கும் இம்மருத்துவன் உற்ற துணைவனாவான்.

மருத்துவனின் சந்தா விவரம்

ஆண்டு 1-க்குத் தபாற்கூலி யுள்பட உள் நாடாகிய இந்தியா, இலங்கை, பர்மா முதலிய இடங்களுக்கு ரூ. 3—0—0.

1-11-28.
31-1-29.

மானேஜர், மருத்துவன் ஆபீஸ்,
221 தங்கசாலை தெரு, சென்னை.

Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah. Edited and Published by Mani. Thirunavukkarasu Mudaliar for the Siva SidSadhanta Maha Samajam.

அதற்குப் பிறர் கூறும் அநர்த்தத்தைத் தவிர்த்து உண்மையபிப்பிராயம் கூறிப் போகும். அதனாலுமே அதற்கு வேதாந்த சூத்திரங்கள் என்றும் ஏற்பட்டது. இந்நூல் அநேக ஆசிரியர்கள் தங்கள் தங்கள் மதத்தினையே வலியுறுத்தியதென்று பாடியம் செய்திருக்கிறார்கள். அதற்கு ஸ்ரீசங்கரபகவத்பாதாசாரியார் ஒரு பாடியஞ் செய்திருக்கின்றார்கள். அது சைவர்கள் சொல்லும் ஏகான்மவாதம் மாயாவாதம் என்னும் நிலையிலேயே நிற்பதாக ஏற்படுகின்றது. சுவமதஸ்தர்கள் அதனையே வேதாந்தமென்றும் அத்வைத மதமென்றும் பரமஹம்ச மதமென்றும் கூறுகின்றார்கள். உலகவழக்கிலும் பெரும்பாலும் அதனையே வேதாந்தமென்றும் கூறுவதுண்டு. ஆனால், ஸ்ரீசங்கரர்சிஷ்ய பரம்பரைகளுக்குள்ளுமே, ஸ்ரீசங்கரரின்

“ சுத்தச்சிவனுரை தானதிற்றோயாமல்
முத்தர்ப்பதப்பொருள் முத்திவித்தாமூலம்
அத்தகைஆன்மா அரனையடைந்தற்றால்
சுத்தச்சிவமாவரே சுத்தசைவரே.”

என்றதின் உண்மையபிப்பிராயம் இன்னதென்று விளங்காது பலர் பலவிதமாகக் கூறுகிறார்கள். தற்காலத்து இவ்வேதாந்த விசாரணை செய்துவரும் ஐரோப்பிய பண்டிதர்களிலும் இவ்வித வேற்றுமை காண்கிறோம். மோக்ஷமூலர் அவர்களும், தம் ‘ வேதாந்தம் ’ என்னும் அரிய நூலில் சங்கரரின் அபிப்பிராயம் இன்னதெனக் காட்டி, அவருக்குப் பின் வந்தோர் அம்மதத்தைச் சுத்தம் மித்யாவாதமாக்கிவிட்டார்களெனவும், அதனாலேயே மற்றவர்கள் அம்மதத்தை பிரச்சன்ன புத்தமதமென்று இழித்தார்களென்றும் காட்டியிருக்கிறார். இந்நூல்களை யாதாரமாகக் கொண்டொழுகிவரும் நூல்கள் பஞ்சதசி, கைவல்யம், ஞானவாசிட்டம் (குரு ஞானவாசிட்டமல்ல) முதலிய நூல்களாம். ஆக இவ்விதமான வேதாந்த நூல்களை நாம் அநுசரியாவிடில், உண்மை வேதாந்தத்தை இகழ்ந்ததாக மாட்டாது. ஆயின், வேதாந்த சூத்திரத்துக்கு ஸ்ரீகண்டசிவமும் ஒருபாடியம் இயற்றி உள்ளார்கள். இப்பொழுதுள்ள பாடியங்களில் இது புராதனமானது. மற்றைய வெல்லாம் இதற்குப் பிற்பட்டவைகளேயாம். இதன் உண்மை சங்கர விஜயத்தினாலேயே காணலாம். இந்தச் சைவபாடியஞ் செய்தவரின் கருத்து சூத்திரங்கள் சிவாத்துவித சைவத்தையே உணர்த்தி நின்றதென்பது. யாமும் அச்சூத்திரங்களையும், ஆங்கிலேயத்துள்ள எல்லாப் பாடியங்களையும் படித்துப் பார்த்ததில், ஸ்ரீ கண்டசிவத்தின் அபிப்பிராயமே சூத்திரங்களாற் போந்ததென்பதும் விளங்குகிறது. சங்கர பாஷ்யத்தையும் இராமனுஜ பாஷ்யத்தையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த டாக்டர் தீபா என்ற பெரியோரின் அபிப்பிராயமும் இதற்கு ஒத்தே வருகின்றது. ஆயின் இந்த வேதாந்த சூத்திரம் நம்மவர்களிற் சிலர் அது ஏகான்மவாதத்தை நிலையுறுத்துவதாக எண்ணி ஒதுக்குகின்றார்கள். சங்கரர் முதலிய மகான்கள் சிலர் அப்படியே அதனைக் கொண்டதையும் கண்டோம்; ஆயின் அதன் உண்மைக் கருத்து, ஸ்ரீகண்டசிவமும், டாக்டர் தீபாவும் கூறியபடியும், எம்விசாரணைக்கு எட்டியபடியும், சிவனும் சீவனும் வேறு என்பதே. ஆகவே, உண்மையில் பலகலையாகமம் வேத வேதாந்தங்களின் கருத்து சிவத்தையும், சீவனையும் அவர்களுக்குள்ள பேதத்தையும், அபேதமாகும் முறையினையும், பின்னிற்கு நிலையினையும் தெரித்து நிற்



கின்றதென விளங்கும். நமது ஸ்ரீ கண்டசிவமும் அவருக்குப் பின் வந்தோராகிய அரதத்த சிவாசாரியர், அப்பையதீக்ஷிதர் அவர்களும் தற்காலத்து ஸ்ரீகாசிவாசி செந்திநாதய்யர் அவர்களும் காட்டிய வண்ணம், வேதவேதாந்தங்களில் ஆன்மா, பரமான்மா, அமிர்தம், சத்து, சிவம், ஹரன், ருத்ரன் முதலிய பதங்கள் பரியாய பதங்களாய் உபயோகிக்கப்பட்டுப் பரம் பொருளாகிய பரம சிவத்தைக் குறிக்கும். உபநிடதங்களில் ஆன்மா என்னும் பதம் சீவான்மா, சிவம் என்னும் இரண்டு பொருளையும் உணர்த்திவரும் பிரயோகங்கள் காணப்படும். ஏகான்மவாத நூல்களிலேயே, சிவன் ஹரன் முதலிய பிரமத்தின் நாமங்களை விட்டு ஆன்மா, பிரமம் என்னும் நாமங்களை உபயோகிக்கப்பட்டு வருகிறது.

இன்னொரு விஷயத்தை மட்டும் குறித்தபின் இவ்வியாசத்தை முடிவு செய்கின்றோம். பகவத்கீதையானது மகாபாரதமென்னும் இதிகாசத்தின் ஒரு பாகமாகி எல்லோராலும் அங்கீகரிக்கக் கூடிய நூலேயாம். ஆயின் சைவர்களிற் சிலர், அதை நிராகரித்தது மற்றப் புறச்சமயத்தவர்கள் அதனை அதிகமாகப் பாராட்டி, அதனை வேறு விதமாய்ச் செய்வதினால் தான். யாம் அதனை ஓதியுணர்ந்தமட்டில் அது சுத்த சைவ நூலாகக் கொண்டோம். ஸ்ரீ கண்ணபிரான் சம்பந்தப்பட்ட மட்டில் பாஞ்சராத்திரிகள் அவரைப் பரம் பொருள் என்று கொள்ளுகின்றார்கள் என்பதிற் சந்தேகமில்லை. ஏகான்மவாதிகளாகிய வேதாந்திகள், எல்லாம் பரமென்று நினைப்பதால், ஸ்ரீகண்ணனையும் சாமான்ய பரமாகக் கொள்வதில் விசேஷமில்லை. ஆயின் சித்தாந்திகள் கொள்ளுவது அவ்விதமன்று. சிவஞானயோகிகள் கூறியது வேதாந்திகள் கூறுவது போல்வதொன்றன்று. ஸ்ரீ கண்ணபிரான் சிவோகம் பாவனையின் முதிர்ந்து, சிவனே தானெனக்கொண்டு குருமுகமாய் நின்று அருச்சுனனுக்கு உணர்த்திய சீவமுக்தன் என்பதே சிவஞான யோகிகள் கருத்து. இதனை முதல்முதல் சுட்டிக்காட்டியவர் ஸ்ரீ கண்டசிவம். இதனையவர் பாஷியம், I. 1. 31. கீழ்க் காண்க.

இதனை விரித்து ஸ்ரீமத் அப்பயதீக்ஷிதர் சிவாதித்தமணிதீபிகையிலும் கூறியுள்ளார்கள். அங்குக் கண்டு தெளிக.

## பிரிவாற்றாமை

“ சித்தாந்தம் ” மேமாதத்து இதழ் வெளி வருவதற்குரிய செலவை அன்புடன் ஏற்றுக்கொண்ட சைவத் திருவாளர் ம. சி. சோமசுந்தர முதலியார் அவர்கள் சிவபத மடைந்தமைக்கு இச்சமாஜத்தார் மிகப் பெரிதும் வருந்துகின்றனர்.